RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 28 யூலை 2023 இதழ்:- 11

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் - கனடியப் பிரதமர் தெரிவிப்பு!



இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் அத்துமீறல் களுக்கும் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என நாங்கள் தொடர்ந்து கோருகின்றோம் மனித உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். கறுப்பு ஜீலையின் 40வது ஆண்டை நினைவு கூர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரி வித்துள் ளார். (3ம் பக்கம் பார்க்க)



# கனடாவில் முதன் முதலாக அமைச்சரான ஈழத்தமிழ்மகன்! சுதேச உறவுகள் அமைச்சராகப் ஹரி ஆனந்தசங்கரி பதவியேற்பு

# பாப்பரசரின் பிரதிநிதி நல்லூர்க் கந்தனை தரிசித்தார்!

## நல்லூர் ஆலய நிர்வாகத்தினரின் செயற்பாடு:- மத நல்லிணக்கத்திற்கான ஆரம்பப் புள்ளி!



பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி நல்லூர் ஆலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு நல்லூர் கந்தனை தரிசித்தார், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைக்காக பிரதிநிதி அதி விந்தனைக் குரிய கலாநிதி பிறாயன் ஊடக்வே மூன்று நாள் அப்போஸ்தலிக்க விஜயமாக யாழ்ப்பாண மறை மாவட்டத்துக்கு சென்றிருந்த நிலையில் யாழ்ப் பாண மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் சென்று நல்லூர் கந்தனை தரிசித்தார், இது தொடர்பில் யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவிக்கையில் (3ம் பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

## SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Markham Rd & Denison**



**Markham** $599,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Walking Distance To Banks, Costco

**Tecumesh Rd E & Hall Ave**



**Windsor** $349,000
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors

**Markham & Eglinton**



**Scarborough** $529,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

**Dundas/Hurontario St**



**Mississauga** $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

**Ryerson/Victoria**



**Niagara Falls** $649,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Fantastic Investment Potential

**Lawrence & Morningside**



**Scarborough** $659,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

**Liverpool & Bayly**



**Pickering** $724,500
Bedrooms: 2 Washrooms: 2
Beautifully Maintained, Upgrades

**Durham 57/Mcgill Dr**



**Kawartha Lakes** $834,000
Bedrooms: 3 Washrooms: 1
Newly, renovated waterfront cottage

**Warden / St.Clair**



**Toronto** $849,900
Bedrooms: 4 Washrooms: 3
Feel the Freshness of New Built home

**Finch & Mccowan**



**Scarborough** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Close To All Amenities

**Meadowvale & 401**



**Scarborough** $995,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

**Morningside & Finch**



**Scarborough** $999,900
Bedrooms: 4+1 Washrooms: 3
Fully Renovated Detached Home

**Meadowvale / 401**



**Scarborough** $1,799,995
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

**Ellesmere & Neilson**



**Scarborough** $739,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Good Potential for first time buyers

**Warden / Finch**

FOR LEASE



**Scarborough** $2,700
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Fully Painted

**Westney & Rossland**



**Ajax** $998,000
Bedrooms: 3 Washrooms: 4
finished basement with a full bath

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் - கனடியப் பிரதமர் தெரிவிப்பு!



இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் அத்துமீறல் களுக்கும் பொறுப்புக் கூறப்பட வேண் டும் என நாங்கள் தொடர்ந்து கோரு கின்றோம் மனித உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜீலையின் 40வது ஆண்டை நினைவு கூர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரி வித்துள்ளார். அவர் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது

நாற்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கையெங்கும் தமிழர்களுக்கு எதிராக கொடூரமான கொலைகள் புரியப் பட்டன. இவற்றில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் உயிரிழந்து பெரும் எண்ணிக்கையானோர் காய மடைந்தார்கள் இடம் பெயர்ந்தார்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டார்கள்.

கறுப்பு ஜீலையின் கொடுமை பதற்ற த்தை அதிகரித்து சில தசாப்தங்கள் நீடித்த ஆயிரக்கணக்கானோர் மரண மாகிய ஆயுத மோதலாக மாறியதுடன் இதன் மனப்பாதிப்பை சமூகங்கள் தற்போதும் அனுபவிக்கின்றன.

சோகமான இந்த நாளில் நாம் தமிழ் கனேடியர்களுடனும் உலகம் எங்கிலும் உள்ள தமிழ் சமூகங்களுடனும் இணைந்து பாதிக்கப்பட்டவர்களை நினைவேந்தி தப்பிப்பிழைத்தோரை கௌரவிப்பதுடன் வெறுப்பிற்கும் வன் முறைக்கும் எதிராக எப்போதும் குரல் கொடுப்பதற்கு உறுதியுடன் இருப் பதை மீள வலியுறுத்துகின்றோம்.

மே 18ம் திகதியை தமிழ் இனப்படு கொலை நினைவேந்தல் நாளாக பிரகட னம் செய்யும் பிரேரணையை கனேடிய நாடாளுமன்றம் ஒருமனதாக அங்கீகரித்து இவ்வாண்டில் இந்த நாள் முதல்முறையாக கடைப்பிடிக்க ப்பட்டது.

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் அத்துமீறல் களுக்கும் பொறுப்புக் கூறப்பட வேண் டும் என நாங்கள் தொடர்ந்து கோரு கின்றோம் மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒரு போதும் நிறுத்தாது எனவும் தெரிவித் துள்ளார்.

இது இவ்வாறிருக்க இலங்கையில் கறுப்பு ஜீலையில் உயிர் பிழைத்தவர் களை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சந்தித்துள்ளார்.

இதனை அவர் தனது டுவிட்டர் பதி வில் தெரிவித்துள்ளார். மனதை நெகிழ வைக்கும் காலை, கறுப்பு ஜீலையின் பயங்கரமான வன்முறைகளில் இருந்து உயிர் தப்பியவர்களின் கதைகளை செவிமடுத்தேன் என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

உங்கள் கதைகளை பகிர்ந்து கொண் டமைக்கு நன்றி உங்கள் வலிமை உங்களின் நம்பிக்கை மீண்டும் எழும் திறன் ஆகியவற்றை ஒருபோதும் நான் மறக்கமாட்டேன் எனவும் அவர் பதி விட்டுள்ளார்.

# நல்லூர் ஆலய நிர்வாகத்தினரின் செயற்பாடு:- மத நல்லிணக்கத்திற்கான ஆரம்பப் புள்ளி!



நல்லூர் ஆலயத்திற்குள் கத்தோலிக்க மதகுருவின் ஆடையுடன் அனுமதித்த மையினை மத நல்லிணக்கத்திற்கான ஆரம்பப் புள்ளியாக பார்க்கின்றோம் என யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குள் நாட்டின் ஜனாதிபதி செல்வதாக இருந்தால் கூட மேலாடை கழற்றி செல்ல வேண்டும் என்பது ஆலய விதிமுறை, அதற்க மைய அன்றைய தினம் (25 யூலை 2023) இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதியுடன் நானும் மேலும் ஒரு குருவும் சென்றிருந்தோம்.

உரிய நடைமுறைகளை பின்பற்றி நாங்கள் ஆலயத்தின் முன்றலில் நின்று வெளியேறிய போது நல்லூர் கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர் எங்களை மதகுரு வின் ஆடையுடன் உள்ளே செல்ல முடி யும் என அழைத்திருந்தார்கள்.

அந்த அழைப்பை ஏற்று ஆலயத்திற் குள் நமது கத்தோலிக்க மதகுருவின் ஆடையுடன் சென்றிருந்தோம், எனவே இந்த விடயமானது மத நல்லிணக்க த்திற்கான ஒரு முன்னுதாரணமாகும் மற் றும் மத நல்லிணக்கத்திற்கான ஒரு ஆரம்ப புள்ளி என கூறலாம். எதிர் காலத்தில் நாங்கள் அனைத்து மத மக்க ளும் ஒற்றுமையாக இணைந்து செயற் படுவதற்கான ஒரு ஆரம்ப புள்ளியாக நாங்கள் பார்க்கின்றோம் எனவும் தெரி வித்தார்.

இதேவேளை அன்றைய தினம் வேலணை மத்திய கல்லூரிக்கு சைவப் பாரம்பரியமிக்க அதிபர் ஒருவரை நிய மிக்குமாறு கோரி பழைய மாணவர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் வேற்று மதத்தை சார்ந்த ஒருவரை அதிபராக நியமிப்பதற்கு கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை சுட்டிக் காட்டியே குறித்த போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று வழமையான பூஜை வழிபாடுகள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## புதிய முகவரி

## 104 Rivalda Rd
## Northyork - On - M9M 2M8
## (Weston/Sheppard)

## இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போறற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 13வது திருத்தத்தின் ஊடாக தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்குமாயின் அதற்கு முழுமையான ஆதரவு

அதிகார பகிர்வு தொடர்பில் சர்வக்கட்சி கூட்டத்தை நடத்த முன் ஜனாதிபதி பொதுஜன பெரமுனவை ஒன்றிணைத்து ஒரு தீர்மானத்தை நாட்டுக்கு அறிவிக்க வேண்டும்.

13ஆவது திருத்தத்தின் ஊடாக தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமாயின் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் திங்கட்கிழமை (24) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது பல பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது என நித்திரையில் இருந்து எழுந்ததை போல் கருத்துரைக்கிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த அரசாங்கங்கள் ஏன் 13ஆவது திருத்தத்தை



நடைமுறைப்படுத்தவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர்களின் அரசியல் பிரச்சினை, அதிகார பகிர்வு ஆகியவற்றை தனது அரசியலுக்காக பயன்படுத்திக் கொள்கிறார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்றுவித்தார்.அதனை கூட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை நல்லாட்சி அரசாங்கம் பலவீனப்படுத்தி, மாகாண சபை வெள்ளை யானை போன்றது என்ற நிலைப்பாட்டை தோற்றுவித்தது.

மாகாண சபை முறைமை நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூற வேண்டும்.

13 ஆவது திருத்தம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் சர்வ கட்சி கூட்டத்தை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். சுதந்திர மக்கள் சபைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.அதிகார பகிர்வு விவகாரத்தில் ஏனைய அரசியல் கட்சிகயுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்னர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் எத்தனையோ சர்வகட்சி கூட்டங்களை நடத்தி விட்டார். ஆனால் தீர்வு கிடைக்கவில்லை. தமிழர்களையும், சர்வ தேசத்தையும் ஏமாற்றுவதற்காக சர்வக்கட்சி என்ற நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முன்னர் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை அவர் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என்றார்.

# ஆபத்தை உணர்தல் அவசியம்

எதிர்பார்ப்புகளுடன் நோக்கப்பட்ட ரணிலின் இந்திய பயணம் நிறைவுபெற்றது. எதிர் பார்த்தவாறே இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்தியிருக்கின்றார்.

மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துவதற்கான எதிர்பார்ப்பை வெளியிட்டிருக்கின்றார். இதனைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் அவசரமாக அனைத்து கட்சிகளின் தலைவர்களை சந்திக்கவுள்ளார்.

ரணிலைப் பொறுத்தவரையில் அனைத்து கட்சிகளும் உடன்பட்டால் அரசியல் தீர்வு விடயத்தில் தனக்கு எவ்வித முரண்பாடுமில்லை என்று கூறுகின்றார். ஆனால், நமக்கு நன்றாகத் தெரிந்த விடயம் சில விடயங்களில் அனைத்து கட்சிகளும் உடன்படப்போவதில்லை.

குறிப்பாக, 13ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் பொலிஸ் அதிகாரத்தை அமுல்படுத்துவதில் நிச்சயம் அனைத்து கட்சிகளும் உடன்படப் போவதில்லை.

இந்த நிலையில் தமிழ் கட்சிகள் விடயங்களை எவ்வாறு கையாளப் போகின்றன? வழமைபோல் 13 இற்கு அப்பால் செல்லுதல் அல்லது 13 மைனஸை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கொழும்பின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்குண்டு இறுதியில் புதிய அரசியல் யாப்பு பற்றிப் பேசப் போகின்றனவா அல்லது விடயங்களை தூர நோக்குடனும் விவேகத்துடனும் கையாளப் போகின்றனவா? மாகாண சபை முறைமையிலுள்ள குறைபாடுகளுக்கு அப்பால் அது வடக்கு – கிழக்கில் குறிப்பிட்டளவான அதிகாரத்தை கையாள்வதற்கான வாய்ப்பை தமிழ் மக்களுக்கு வழங்குகின்றது.

இந்த நிலையில், ரணில் அதனை நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறுகின்றபோது பந்தை ரணிலின் பக்கமே வீசிவிட வேண்டும். தமிழர் தரப்பு விடயங்களை குழப்பியதான தோற்றத்தை ஏற்படுத்தி விடக்கூடாது.

ஏனெனில், இந்தியா, 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் மாகாண சபை தேர்தலையே வலியுறுத்தியிருக்கின்றது.

அபிலாசைகள் என்னும் சொல்லை பயன்படுத்தியிருந்தாலும் கூட அதன் அடித்தளமாக 13ஆவது திருத்தச் சட்டமே இருக்கின்றது. எனவே, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் முன்னேற்றங்களை காண்பிப்பதற்கான வாய்ப்பை ரணிலுக்கு வழங்க வேண்டும்.

ஏனெனில், அதனை அமுல்படுத்துவதில் தனக்கு பிரச்னையில்லை என்று ரணில் கூறுகின்றார்.

ஒருவேளை, ரணில் ஏமாற்ற முற்பட்டால் அது ஓர் ஆதாரமான பதிவாகும்.

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அரசியல் தலைமைகள் மீது நம்பிக்கை இழந்திருக்கின்றனர்.

நிலத்தை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்புகளையே தேடுகின்றனர். பெருமளவானர்கள் வெளியேறி வருகின்றனர்.

இந்த நிலைமை நீடித்தால் இன்னும் பத்து வருடங்களில் வடக்கு, கிழக்கின் மக்கள் தொகை மேலும் வீழ்ச்சியடையும். இதனை முடிந்தவரையில் தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு, அதிகார கட்டமைப்பு ஒன்று தேவை. இதனை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். வாய்ப்புகள் கதவை தட்டிக் கொண்டிருப்பது போன்ற கற்பனைகளுடன் அரசியலை முன்னெடுக்க முடியாது.

இதில், எந்தவொரு வெளித்தரப்பும் தமிழ் மக்களுக்கென்று பிரத்தியேகமாக உதவிசெய்யப் போவதில்லை. கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் புத்திசாதுரியமாகக் கையாளுவதன் ஊடாகத்தான் விடயங்களில் படிப்படியாக முன்னேற முடியும்.

கொள்கை முக்கியமென்று வாதிடும், சுலோகங்களில் சுகம் காணும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை. நிலைமை தொடர்ந்தும் சிக்கலடைந்து செல்கின்றது.

# அமைதியான முறையில் நினைவு கூரும் உரிமை முக்கியம்! இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் வலியுறுத்து!



கடந் காலங்களை கையாள்வதற்கும் ஐக்கிய எதிர் காலத்தை உருவாக்குவதற்கும் அமைதியான முறையில் நினைவுகூருவதற்கான உரிமை மிகவும் முக்கியமானது என இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் டொமனிக் பேர்க்லெர் தெரிவித்துள்ளார்

கொழும்பில் 23 யூலை 2023 கறுப்பு ஜீலையின் நாற்பதாவது வருடத்தை நினைவுகூற முயன்றவர்களை பொலிஸார் பலப்பிரயோகம் செய்து அகற்றியதை காண்பிக்கும் படத்தை பதிவு செய்து அவர் டுவிட்டரில் தனது கருத்தினை பதிவு செய்துள்ளார்

சுவிஸ் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 40வருடங்களிற்கு முன்னர் கறுப்புஜுலையில் இழக்கப்பட்ட அனைத்து உயிர்களையும் நாங்கள் நினைவுகூறுகின்றோம்.

கடந்த காலங்களை கையாள்வதற்கும் ஐக்கிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் அமைதியான முறையில் நினைவுகூருவதற்கான உரிமை மிகவும் முக்கியமானது.

அனைத்து இலங்கையர்களுக்குமான அமைதி நீதி நல்லிணக்கத்திற்கு சுவிட்சர்லாந்து தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களுக்கு எதிரான 1983ம்ஆண்டின் காயங்கள் இன்னும் ஆறவில்லை - கனேடியத் தூதுவர்

1983ம் ஆண்டின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை என இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக்வோல்ஸ் தெரிவித்துள்ளார். கறுப்பு ஜீலையின் நாற்பதாவது வருடத்தை குறிக்கும் விதத்தில் டுவிட்டரில் பதிவிட்டுள்ள கருத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாற்பது வருடங்களிற்கு முன்னர் இலங்கையில் பல பகுதிகளில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை நாங்கள் நினைவுருகின்றோம்.

இந்த பயங்கரமான நினைவுகள் இடம்பெற்றன என்பதை அங்கீகரிப்பதும் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருவதும் இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய நிரந்தர செழிப்பிற்கான முக்கிய நடவடிக்கையாகும். இந்த இலக்குகளை நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் அனைவரையும் நாங்கள் முழுமையாக ஆதரிப்போம் என கனடா தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கறுப்பு ஜீலையை குறிக்கும் விதத்தில் கொழும்பில் இடம்பெறும் புகைப்படக் கண்காட்சியொன்றை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் பார்வையிட்டுள்ளார். கறுப்பு ஜீலையின் 40வது வருடத்தின் போது சந்திரகுப்த தேனுவர மற்றும் வளர்ந்துவரும் கலைஞர்களின் கலை விசேட கண்காட்சியை நான் பார்வையிட்டேன் என அவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். இந்த கலைப்படைப்புகள் கடந்த காலத்தின் காயங்களையும் அனைத்து



இலங்கையர்களுக்குமான நியாயமான எதிர்காலத்தையும் வெளிப்படுத்தும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறன என அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 12வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் 29 ஒக்டோபர் 2023ஞாயிற்றுக்கிழமை

# தமிழர் தகவல் 32வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும் விருது விழாவும்

கனடியத் தமிழரின் அடையாளமாகத் திகழும் கனடாவின் மூத்த தமிழ் இதழான தமிழர் தகவல் சஞ்சிகையின் 32வது ஆண்டுப் பூர்த்தி விழா ஜீலை 08ம் திகதி சனிக்கிழமை றொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் இடம் பெற்றது.

32வது ஆண்டு மலர் வெளியீட்டுடன் ஆரம்பமான நிகழ்ச்சிக்கு தகவலின் உதவி ஆசிரியர் செல்வி அனோஜினி குமரதாசன் தலைமை தாங்கினார். செல்வி ஆயனி விவேகானந்தனின் தொடக்க உரையை அடுத்து செல்வி கனிக்ஷா – செல்வன் நிக்ஷாந்த் இராசேந்திரகுமார் சகோதரர்கள் தமிழ் வாழ்த்து இசைத்தனர்.

மிஸிஸாகா ஜெயதுர்க்கா ஆலய பிரதம குரு சிவசிறீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜ குருக்கள் ஆசியுரை வழங்கினார். செல்வி அனோஜினி குமரதாசனின் தலைமை உரையை அடுத்து 32வது ஆண்டு மலர் இளநிலாச் சுவடு வெளியீட்டுரையை டாக்டர் மேரி கியூரி போல் வழங்கினார்.

ஆண்டு மலரின் முதல் பிரதி அதன் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை தன்னார்வத் தொண்டராக பணி புரியும் ப.பாலகுமாருக்கும் அவரது துணைவி பூமா பாலகுமாருக்கும் தமிழர் தகவலின் உதவி ஆசிரியர் சசிகரன் பத்மநாதனால் வழங்கப்பட்டது.

அடுத்து, ஊடகத் துறைக்கான சாதனைத் தமிழன் விருது பெற்ற டான் தொலைக்காட்சியின் தலைவர் திரு. எஸ்.எஸ்.குகநாதனின் சிறப்புரை இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து 32வது ஆண்டு விருதுகள் வழங்கும் நிகழ்வு ஆங்கிலத்தில் ஆரம்பமானது. றொறன்ரோ மாவட்ட கல்விச் சபையின் பிரதித் தலைவரும், சமூக செயற்பாட்டாளருமான திரு. நீதன் சண் பன்னிரண்டாவது ஆண்டாக இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

றொறன்ரோ நகரின் புதிய முதல்வராக கடந்த மாதம் தெரிவு செய்யப்பட்ட திருவாட்டி ஒலிவியா செள விழாவில் பிரதம விருந்தினராக பங்கு பற்றி வாழ்த்துக் கலந்த சிறப்புரை வழங்கினார்.

கனடியத் தமிழர் சமூகத்தில் விருதுகள் வழங்கிக் மதிப்பளிக்கும் பாரம்பரியத்தை தமிழர் தகவல் சஞ்சிகையே முதன் முதலில் 1992ம் ஆண்டில் ஆரம்பித்தது. கடந்த 32 ஆண்டுகளில் சமூகப்பணி, பொதுப்பணி, கல்விப்பணி, கலை ,லக்கியப்பணி, ஊடகப்பணி, அகதிகள் சேவை போன்றவற்றில் ஈடுபட்ட 279 பிரமுகர்கள் விருதுகள் வழங்கி தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தன்னார்வத் தொண்டு மற்றும் தலைமைத்துவப் பண்பு கொண்ட இளையோரும், தமிழ்க் கனடிய வணிகத்துறை முன்னோடிகளும் இவர்களுள் அடங்குவர். தமிழரல்லாத பன்முக சேவையாளர்கள் பத்துப்பேர் தமிழர் தகவல் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது சர்வதேச புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. அ. முத்துலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. கனடாவில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்கள் தமிழ் எழுத்துலகில் அறுபது ஆண்டுகள் பயணித்திருப்பதை கொண்டாடும் முகமாக இவ்விருது அவருக்கு வழங்கப் பட்டது.

இவ்வாண்டிற்கான ஊடக சாதனைத் தமிழன் விருது யாழ்ப்பாணத்தில் தனது தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் டான் தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குனரான திரு. எஸ்.எஸ். குகநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இலங்கையில் மட்டுமல்லாது புலம்பெயர் தமிழர் வாழ்விலும் ஊடகத்துறையில் அச்சு மற்றும் இலத்திரனியல் பரப்பில் முன்னோடிச் சாதனைகளை புரிந்தவராக திரு. எஸ். எஸ். குகநாதன் அவர்கள் திகழ்கிறார். தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு தினசரியின் ஆசிரியராகவும் திரு.குகநாதன் பணியாற்றுகிறார்.

தமிழர் தகவல் சிறப்பு விருது ஆஸ்திரேலியாவில் வதியும் திருமதி பராசக்தி சுந்தரலிங்கம் அவர்களுக்கும், கலைத்துறை விருது திருமதி ஜெயராணி சிவபாலன் அவர்களுக்கும், சமூகசேவை விருது திரு ஜெயசிங் டேவிட் அவர்களுக்கும், முதன்நிலை இளையோர் சாதனைவிருது டாக்டர் ஜனகன் சிறீரஞ்சன் அவர்களுக்கும், தொழில்துறை முன்னோடி விருது திருமதி அபி அமலன் மற்றும் திருமதி ரஜினி நாதன் இருவருக்கும் வழங்கப்பட்டது.

விழாவின் சிறப்பு விருந்தினராக றொறன்ரோவின் புதிய மேயராக தெரிவு செய்யப்பட்ட திருவாட்டி ஒலிவியா செள (Olivia Chow) பங்குபற்றி விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

புதிய மேயராக வெற்றி பெற்ற பின்னர், உத்தியோகபூர்வமாக இன்னும் பதவி ஏற்காத நிலையிலும் தனது நகரசபை மண்டபத்தில் தான் கலந்து கொள்ளும் முதலாவது நிகழ்ச்சியாக தமிழர் தகவல் விருது விழா அமைந்திருக்கிறது என்பதை ஒலிவியா செள தமதுரையில் பரவசத்து டன் பகிர்ந்து கொண்டார்.

தமிழர் தகவல் விருதுகள் தெரிவுக்குழுவின் தலைவர் பேராசிரியர் அமுது யோசெப் சந்திரகாந்தனின் நெறிப்படுத்தலில் இளையோர்களான அக்சன் ரவி சங்கர், அமிருதா சசிகரன், செளமியா சந்துரு, கெவின் தெய்வேந்திரன், அருமிதா சசிகரன், அக்ஷேஷ ஜெயபாலசிங்கம் ஆகியோர் விருதாளர்களை அறிமுகம் செய்து உரையாற்றினர்.

விருது பெற்றவர்கள் சார்பில் எழுத்தாளர் திரு.அப்பாத்துரை முத்துலிங்கம் உரையாற்றினார்.

செல்விகள் அபர்ணா கேதா, பூஜா தேவதாஸ் ஆகியோரின் கனடிய தேசிய கீதத்துடன் 32வது ஆண்டு பூர்த்தி விழா நிறைவு பெற்றது. விழாப் படத்தொகுப்பு 9ம் பக்கத்தில் உள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# இந்தியப் பிரதமரின் கருத்துக்கு தமிழ்த் தலைமைகள் வரவேற்பு!

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதனூடாக ஒற்றை ஆட்சிக்கு அப்பாற்சென்ற அரசியல் தீர்வையும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளமையை தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் வரவேற்றுள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த21 யூலை 2023 வெள்ளிக்கிழமை தலைநகர் புதுடில்லியில் நடை பெற்றது.

இதன் போது அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்திய பிரதமர் மோடி, தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு முன்பாக அவரிடம் வலியுறுத்தப்படவேண்டிய விடயங்களை உள்ளடக்கி இந்திய பிரதமர் மோடிக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருந்த இலங்கையின் தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள், இந்தியாவின் வலியுறுத்தல் தொடர்பில் பலதரப்பட்ட பிரதிபலிப்புக்களை வெளிக் காட்டியுள்ளனர்.



அதன்படி, இது குறித்து கருத்து வெளியிட்ட இலங்கை தமிழரசு கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களை நடத்துதல் ஆகிய வற்றை இந்தியா வலியுறுத்தியுள்ளமை வரவேற்கத் தக்கது என்றும் இவ் விடயங்கள் நடைமுறைப்படு த்தப்படாமல் இருப்பது சட்ட விரோதமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மோடி ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தம் ஒரு புறமிருக்க ஒற்றையாட்சிக்கு அப்பாற்சென்ற அரசியல் தீர்வே தமிழ் மக்களின் அபிலாஷையாக காணப்படும் நிலையில், அதனையும் மோடி தனியாக வலியுறுத்தியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி, இவ்விரு விடயங்களையும் தனித்தனியாக நோக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.



அடுத்ததாக இந்தியாவின் கடந்த கால வலியுறுத்தல்களுடன் ஒப்பிடுகையில், இம்முறை '13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கின்றோம்' என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளமை ஓரளவுக்கு வரவேற்கத்தக்க முன்னேற்றகரமான நகர்வாகும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். மேலும், தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை 13ஆவது திருத்தத்துடன் தொடர்புபடாத வகையில் இந்திய பிரதமர் மோடி முன் வைத்திருப்பாரேயானால், அதனையும் தாம் வரவேற்பதாக அவர் குறிப்பிட்டார்.



அதேவேளை பிரதமர் மோடியின் வலியுறுத்தல் தொடர்பில் திருப்தியடைவதாக கூற முடியாது என்றும், மாறாக அவர் தனது கடமையை தான் செய்திருக்கின்றார் என்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் தமிழ் மக்கள் சார்பில் இந்தியாவே கையெழுத்திட்டது என்றும் எனவே, அது சார்ந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தும் கடப்பாடு இந்தியாவுக்கு உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



இந்நிலையில், இந்திய பிரதமரினால் இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளையும் இலங்கை மீதான இந்தியாவின் எதிர்பார்ப்பினையும் நம்பிக்கையையும் வரவேற்பதாகவும், தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் தரப்பாக இல்லாமல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தரப்பு என்ற அடிப்படையில் அந்த ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளது. மேற்படி விடயங்கள் தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன் வலியுறுத்தினார்.



மேலும், இது குறித்து கருத்து வெளியிட்ட டெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் மோடியினால் வலியுறுத்தப்பட்ட விடயங்களை நாம் வரவேற்கும் அதேவேளை இது எமக்கு பெரிதும் ஆறுதல் அளிக்கிறது. இருப்பினும் கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது இந்திய விஜயத்தின் பின்னர் 13, 13பிளஸ் என்றெல்லாம் பேசிய போதிலும், அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, இம்முறையும் இவ்வலியுறுத்தல்கள் வெறும் பத்திரிகை செய்திகளாக நின்று விடாமல், அவை உரியவாறு நிறைவேற்றப்படுவதற்கான அழுத்தத்தை இந்தியா வழங்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## இந்தியாவின் நிலைப்பாடு

இந்தியாவின் தலையீட்டைக் கோரி நான்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியிலிருந்து மூன்று கடிதங்களும், சிவில் சமூகத்திடமிருந்து ஒரு கடிதமும் அனுப்பப்பட்டிருந்தது.

கட்சிகளை பொறுத்தவரையில், ஒப்பீட்டடிப்படையில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து அனுப்பிய கடிதத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஏனைய கட்சிகளான, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (முன்னணி) மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆகியவை, இந்தியா சமஷ்டியை வலியுறுத்தவேண்டுமென்று, கோரியிருந்தன. ஆனால் சிவில் சமூகத்தின் கடிதம் ஒன்று தான், மிகவும் தெளிவாகவும், இந்தியாவின் அயலுறவுக் கொள்கை தொடர்பான புரிதலுடன் முன்வைக்கப்பட்டிருந்தது.

சிவில் சமூகம் சுட்டிக் காட்டியவாறு, இந்தியா அதன் நிலைப்பாட்டை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியிருக்கின்றது. அதாவது, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் கடப்பாட்டை இலங்கை நிறைவேற்றுமென்று தாம் எதிர்பார்ப்பதாக, இந்திய பிரதமர், நரேந்திர மோடி தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு ஆச்சரியமானதல்ல. இது இந்தியாவின் கொள்கை நிலைப்பாடாகும். ஆனால் இதனை விளங்கிக்கொண்டு செயலாற்றுவதில் தான் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் என்போர் தொடர்ந்தும் பின் நிற்கின்றனர்.

ஒரு நாட்டின் அழுத்தங்களை கோரும் போது, அந்த நாட்டின், அயலுறவுக் கொள்கை தொடர்பான தெளிவு இருக்கவேண்டியது கட்டாயமானது. ஆனால் அனுபவமுள்ள தலைவரென்று கருதப்படும் இரா.சம்பந்தன், தொடர்ந்தும் ஏன் தவறிழைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதைத் தான் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது.

இந்தியாவின் தலையீட்டைக் கோரிய சிவில் சமூக பிரதிநிதிகளிடம் இருக்கின்ற தெளிவு, ஏன் கட்சிகளிடம் இல்லாமலிருக்கின்றது? அல்லது, தமிழ் மக்களுக்கு எந்தவொரு அரசியல் தீர்வும் கிடைத்து விடக்கூடாதென்பதில் கட்சிகளின் தலைவர்கள் என்போர் உறுதியாக இருக்கின்றனரா? இந்திய பிரதமரின் தெளிவான செய்தி ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது.

அதாவது, இந்தியாவை நோக்கி சமஷ்டியை வலியுறுத்தியவர்கள், இந்தியாவுக்கு வரலாறு போதிக்க முற்பட்ட சம்பந்தன் ஆகியோரது, வேண்டுகோள்கள் புதுடில்லியால் கண்டு கொள்ளப்படவில்லை. உண்மையில் அவைகளை ஒரு பொருட்டாகக் கூட புதுடில்லி கருத்தில் கொள்ளவில்லை.

உண்மையில், இந்தியாவிடம் சமஷ்டியை கோரி, கடிதங்கள் எழுதுவதை இந்தியா ஒருபோதும் வரவேற்காது – மாறாக, தங்களுக்கு தேவையற்ற வகையில் இராஜதந்திரச் சங்கடங்களை ஏற்படுத்துவதாகவே அவர்கள் நோக்குவார்கள். ஏனெனில் ஒரு நாடு, அதன் நிலைப்பாட்டை முன் வைத்த பின்னர் அதற்கு மாறான கோரிக்கைகளுடன் செல்வதானது, அந்த நாட்டின் அணுகு முறைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையே சுட்டிக்காட்டும்.

அவர்கள் வலியுறுத்தும் ஒன்றின் மூலம் சென்று, அதிலிருந்து, முன்னோக்கிச் செல்ல முற்பட்டால் அது சரியானதாகும். இதுவரை இந்தியாவை அணுகியவர்களில், அண்மையில் முன்னெடுக்கப்பட்ட சிவில் சமூக முன்னெடுப்பு ஒன்றுதான், இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை புரிந்து கொண்டு, முன்னெடுக்கப்பட்ட ஒரேயொரு நகர்வாகும். அந்த வகையில் சிவில் சமூகத்தின் தலையீடு அதன் இலக்கை நிறைவு செய்திருக்கின்றது. இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. இனியாவது, இதனை புரிந்து கொண்டு, செயற்படுதற்கான முயற்சிகளை தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகள் மேற்கொள்ள வேண்டும்.

# 13வது திருத்தம் தொடர்பில் தமிழ்க்கட்சிகளின் எம்.பிக்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல - ஜனாதிபதி



13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மட்டும் கலந்துரையாடுவது போதுமானதல்ல என்றும் இது நாடு முழுவதும் அமுல்படுத்தும் விடயம் என்பதால் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாட வேண்டும் என்பதே தனது நிலைப்பாடு என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி மாநாட்டில் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல எனவும் அது முழு நாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த புதன் கிழமை (26) மாலை இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் வடக்கு-கிழக்கு அபிவிருத்தித் திட்டம் குறித்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக இந்த சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு, புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், தனக்கு மாத்திரமன்றி இதற்கு முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை என்றும் புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டிற்காக இந்த யோசனைகளை முன்வைப்பது மாத்திரமே தனது கடமை என்றும், இதனை பாராளுமன்றமே நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் ஒரேயொரு வாக்கு மட்டும் வைத்துக் கொண்டு இதனை செய்ய முடியாது என்றும் இந்தப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் கூட்டாக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஒன்பது மாகாண சபைகளில் ஏழு மாகாணசபைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ளன என்று சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, எதிர்காலத்தில் மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்தால், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். முதல் பட்டியலில் உள்ள, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பல விடயங்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருப்பதாகவும் எனவே அந்த அதிகாரங்களைப் போன்றே விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் கீழ்மட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டிற்கான கொள்கைகளை மத்திய அரசாங்கம் வகுக்க வேண்டுமெனவும், அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு தேவையான வசதிகளை மாகாண சபை வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர்கள் பதவியை வகித்துக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்தப் பதவியை வகித்தவாரே மாகாணசபை உறுப்பினராக செயற்படுவது தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கலந்துரையாடி முடிவு எடுக்க முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஈபிடிபி செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,இ.தொ.க பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவுப் ஹக்கீம், சீ.வி விக்னேஷ்வரன், சாகர காரியவசம், டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, கெவிது குமாரதுங்க, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, சரத் வீரசேகர, வண. அத்துரலியே ரதன தேரர், வீரசுமன வீரசிங்க, அநுர பிரியதர்சன யாப்பா, லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்

# கனடாவில் முதன்முதலாக அமைச்சரான ஈழத்தமிழ்மகன்!
## சுதேச உறவுகள் அமைச்சராகப் பதவியேற்ற ஹரி ஆனந்தசங்கரி

கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈழத்தமிழ் மகன் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கனேடிய அமைச்சரவையில் சுதேச உறவுகள் அமைச்சராக பதவியேற்றுள்ளார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 25 யூலை 2023 ஏழு அமைச்சர்களை நீக்கி விட்டு புதிய அமைச்சர்களை நியமித்தார். அதில் ஒருவராக ஹரி ஆனந்த சங்கரியும் இடம் பிடித்துள்ளார்.



கனடாவில் அமைச்சரான இலங்கைத் தமிழர் ஹரி ஆனந்தசங்கரி என அழைக்கப்படும் சத்தியசங்கரி ஆனந்தசங்கரி கனடிய அரசியல்வாதியும் லிபரல் கட்சி உறுப்பினரும் மனித உரிமை வழக்கறிஞரும் ஆவார்.

இலங்கைத் தமிழரான இவர் 2015 அக்டோபர் 19இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் இசுக்கார்பரோ-ரூச் பார்க் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதற் தடவையாக நாடாளுமன்றம் சென்றார். இவர் இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான ஆனந்த சங்கரியின் மகன் ஆவார்.

றொறன்ரோவில் உள்ள ஓஸ்குட் ஹால் சட்டப் பள்ளியில் சட்டம் பயின்று 2006 இல் பட்டம் பெற்றார். பின்னர் றொறன்ரோவில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

கனேடிய லிபரல் கட்சியில் இணைந்து அரசியலில் நுழைந்தார். புதிதாக உருவாக்கப்பட்ட இசுக்கார்பரோ-ரூச்பார்க் தொகுதியில் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு அவரை எதிர்த்து போட்டியிட்ட பழைமைவாதக்கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்து அதி கூடிய வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றிருந்தார். இவர் நீண்ட காலமாக மனித உரிமைகள் பிரச்சினைகளை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வாதிட்டு வருகிறார். பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட பல்வேறு மன்றங்களில் கலந்து கொண்டவராவார்.


**கொழும்பில் வீடு விற்பனை**

**கொழம்பு கொட்டாஞ்சேனையில் திருத்தி அமைக்கப்பட்ட தொடர்மாடியில் வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.**

**மேலதிக விபரங்களுக்கு:- 647 779 1712**

# இளையோர் தலைமைத்துவத்தில் நிகழ்ந்த தமிழர் தகவல் 32வது ஆண்டு விருது விழா













விழா தொகுப்பு கட்டுரை
6ம் பக்கத்தில்
இடம்பெற்றுள்ளது












தமிழர் தகவல் TAMILS' INFORMATION ESTD From The Community To The Community 1991



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

22 யூலை 2023 முதல் 28 யூலை 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு துரைராஜா ரவீந்திரன் (துரைரவி)

புங்குடுதீவு 7ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா ரவீந்திரன் அவர்களது இரண்டாம் ஆண்டு நினைவு நாள் 26 யூலை 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு துரைராஜா ரவீந்திரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குமாரசாமி துரைராஜா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராசா அவர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 26 யூலை 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குமாரசாமி துரைராசா அவர்களது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2023 வெள்ளிக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 28 யூலை 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தவசீலன் சுப்பையா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்து தாயகத்தில் அமரத்துவமடைந்த திரு தவசீலன் சுப்பையா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 20 யூலை 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தவசீலன் சுப்பையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு அப்புக்குட்டி செல்லத்துரை

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்.நாச்சிமார் கோவிலடியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அப்புக்குட்டி செல்லத்துரை அவர்களின் 31ம்நாள் நினைவு நாள் 30 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு அப்புக்குட்டி செல்லத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 யூலை 2023 புதன்கிழமை கரம்பனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு மருதப்பு நவரத்தினம் அவர்களது 90வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு மருதப்பு நவரத்தினம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து 21 யூலை 2023 வெள்ளிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழந்தார்



22 யூலை 2023 சனிக்கிழமை கனடாவாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றம் கனடாவின் 26வது ஆண்டு கோடைகால ஒன்றுகூடல் தினமாகும். அன்றையதினம் மேற்படி மன்றத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



23 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை Laval மொன்றியல் கனடாவில் வசிக்கும் திரு திருமதி நவீந்திரராஜா செல்வராணி குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



26 யூலை 2023 புதன்கிழமை புங்குடுதீவு 7ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த துரைரவி என்று அன்பாக அழைக்கப்படும் திரு துரைராஜா ரவீந்திரன் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 யூலை 2023 புதன்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராஜா அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 யூலை 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜேந்திரன் சிவஜா இணையர்களின் செல்வப்புதல்வி சிரேயா அமராவின் பிறந்த 31ம் நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி சிரேயா அமரா தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 யூலை 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஶ்ரீ பஞ்சாட்சரம் அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஶ்ரீ பஞ்சாட்சரம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



28 யூலை 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 யூலை 2023 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


உ
அருள்மிகு
கனடா கந்தசுவாமி கோவில்
CANADA KANTHASWAMY TEMPLE
மகோற்சவ திருவோலை



**கொடியேற்றம்**
22.07.2023
சனிக்கிழமை
உசக்காலப்பூசை
காலை 5:00 மணி
அபிஷேகம்
காலை 6:00 மணி
காலைசந்திப் பூசை
காலை 7:00 மணி
வசந்தமண்டபப்பூசை
காலை 7:45 மணி
கொடியேற்றம்
பகல் 12:00 மணி
சுவாமி வீதிவலம்
உச்சிக்கால பூசை

**தேர்த்திருவிழா**
14.08.2023
திங்கட்கிழமை
உசக்காலப்பூசை
காலை 5:30 மணி
அபிஷேகம்
காலை 6:00 மணி
காலைசந்திப் பூசை
காலை 7:00 மணி
தம்ப பூசை
காலை 7:31 மணி
வசந்தமண்டப பூஜை
காலை 8:30 மணி
சுவாமி இரதத்திற்கு எழுந்தருளல்
காலை 9:30 மணி
இரதம் வீதிவலம்
காலை 11:30 மணி

**ஆடி அமாவாசை தீர்த்தம்**
15.08.2023
செவ்வாய்க்கிழமை
உசக்காலப் பூசை
காலை 5:30 மணி
அபிஷேகம்
காலை 6:00 மணி
காலைசந்திப் பூசை
காலை 7:00 மணி
தம்ப பூசை
காலை 7:31 மணி
வசந்தமண்டப பூஜை
காலை 8.30 மணி
சுவாமி தீர்த்தம்
காலை 9.30 மணி
யாக கும்ப அபிஷேகம்
மதியம் 12.30 மணி

| சப்பறம் | பூங்காவனம் திருக்கல்யாணம் | வைரவர் மடை | வெற்றிவேல் விழா |
|---|---|---|---|
| 13.08.2023 | 16.08.2023 | 17.08.2023 | 18.08.2023 |
| ஞாயிறு | புதன் | வியாழன் | வெள்ளி |
| மாலை | மாலை | மாலை | மாலை |

முக்கிய குறிப்பு விசேடநாட்களில் நேரமாற்றம் ஏற்படலாம்
2 ம் திருவிழா தொடக்கம் 23ம் திருவிழா வரை கிரியை நேர விபரங்கள்

| | | |
|---|---|---|
| காலை | 7.00 மணி | உதயபூசை |
| | 7.30 மணி | அபிஷேகம் |
| | 8.30 மணி | 2ம் காலப்பூசை யாகசாலைப் பூசை |
| | 8.45 மணி | தம்ப பூசை |
| | 10.00 மணி | வசந்தமண்டபப் பூஜை சுவாமி வீதி உலா |
| மதியம் | 12.00 மணி | உச்சிக்கால பூசை |
| மாலை | 4.00 மணி | சாயரட்சைபூசை |
| | 4.30 மணி | அபிஷேகம் |
| | 5.30 மணி | 2ம் காலப்பூசை யாகசாலைப் பூசை |
| | 5.45 மணி | தம்ப பூசை |
| | 7.00 மணி | வசந்தமண்டபப் பூஜை சுவாமி வீதி உலா |
| | 8.45 மணி | அர்த்தசாம பூசை |

பச்சைசாத்தி
யதாஸ்தானம்
திரும்புதல்
மாலை 2:30 மணி
சண்முகார்ச்சனை
மாலை 3:30 மணி
பிராயச்சித்தாபிஷேகம்
மாலை 4:30 மணி
தேரடித்திருவிழா
மாலை 7:00 மணி

**வரலக்ஷ்மி விரதம்**
25.08.2023
வெள்ளி
காலை
மாலை

733 Birchmount Road, Scarborough, ON M1K 1R5
www.canadakanthan.ca

உ
சிவமயம்





## துர்க்கேஸ்வரம்
## ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில்

30 Carnforth Road, Toronto, Ontario, CANADA M4A 2K7 www.durka.com Tel: 416-759 9648

### அஷ்டோத்திர (1008) சகஸ்ர சங்காபிஷேக
# மண்டலாபிஷேக பூர்த்தி விழா

**5-8-2023** (ஆடி மாதம் 20ம் திகதி) **சனிக்கிழமை**

பக்தப்பெருமக்களே!

தெய்வானுக்கிரகத்தினால் துர்க்கேஸ்வரம் திருக்கோவில் புனருத்ததாரணம் செய்யப் பெற்று, வெகுவிமரிசையாகவும் பக்திபூர்வமாகவும் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நிகழ்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் விபரங்களைத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நிகழும் சுவஸ்திஸ்ரீ மங்களகரமான சுபகிருது வருடம் ஆடி மாதம் 20ம் திகதி

**5-8-2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு**

ஸ்ரீமஹாகணபதிப் பெருமான், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத கல்யாணசுப்ரமண்யப் பெருமான் மற்றும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மண்டலாபிஷேகம் பூர்த்தியுறும் அருள்நிகழ்வு கீழே தரப்பட்ட நேரப்பிரகாரம் இடம்பெற உள்ளது. இத்தருணத்தில் பக்தர்கள் அனைவரும் தவறாது ஆசாரசீலர்களாக ஆலயம் வருகைதந்து அம்பாளின் திருவருட்கடாட்சம் பெற்றுய்வீர்களாகுக.

### 4-8-2023 வெள்ளி

காலை 10:00 மணி முதல்

விக்ஸேஸ்வர பூஜை,
புண்யாகவாசனம்
அனுக்ஜை
அன்னதானம்
முதலியன

.........................................

மாலை 6:00 மணி முதல்

கடஸ்தாபனம்
யாகசாலாபிரவேஷம்,
1ம் கால யாகபூஜை
அக்னிகார்யம், ஹோமம்
பூர்ணாகுதி, தீபாராதனை
சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை
பாராயணம்
அன்னதானம் முதலியன

# 5-8-2023 சனி

**பகல் வழிபாடு**

காலை 9:00 மணி முதல்

- 2ம் கால யாக பூஜை
- ஹோமம் - திரவ்யஹோமம்
- பூர்ணாகுதி
- தீபாராதனை
- 1008 சங்காபிஷேகம்

**மண்டலபூர்த்தி**

- விஷேட பூஜை
- அஷ்டோத்ர சதநாமாவளி
- சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம்
- அன்னதானம் முதலியன

**இரவு வழிபாடு**

மாலை 5:30 மணி - சாயரட்சை பூஜை
மாலை 6:00 மணி - மங்கள இசை
மாலை 6:45 மணி - இசை நிகழ்ச்சி
மாலை 7:30 மணி - விஷேட பூஜை
இரவு 8:00 மணி - வசந்த மண்டப பூஜை
இரவு 8:30 மணி - விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்
இரவு 9:00 மணி - அன்னதானம்

**மண்டலாபிஷேக தலைமை சிவாச்சாரியார்**

மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்

**சிவாச்சாரியார்கள்**

சிவஸ்ரீ. வி. ராமநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. வி. மணிக் குருக்கள்
சிவஸ்ரீ. கா. புவனேந்திரக் குருக்கள்
சிவஸ்ரீ. க. கோபிசர்மா குருக்கள்
சிவஸ்ரீ. சு. கேதீஸ்வரநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. நா. ஹரீந்திரன் குருக்கள்
சிவஸ்ரீ. கெ. வெங்கடரமணசர்மா குருக்கள்

**ஆலய மங்கள இசை கலைஞர்**

சுவாமிமலை A.ராஜேஷ் (நாதஸ்வரம்)
திருமருகல் B.பார்த்திபன் (நாதஸ்வரம்)

மேட்டுப்பாளையம் M.வினோத் (தவில்)
திருநெல்லிக்காவல் A.மணிகண்டன் (தவில்)

**என்றும் அம்பாள் பணியில்**

மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்
பிரதம குருக்கள், அறங்காவலர் சபைத்தலைவர்

# கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada
Tel: 416-321-6104 | Fax: 416-321-7557
www.ayyappan.com

## கொடியேற்ற மஹோற்சவ விஞ்ஞாபனம் (ஐயப்பன்)
## ஐயனார் அலங்கார உற்சவம்
## (அனலைதீவு ஐயனார் உற்சவ காலம்)

**கொடியேற்றம் (ஐயப்பன்)**
23-07-2023 ஞாயிறு
காலை 11:00 மணி

**ஐயனார் உற்சவ ஆரம்பம்**
28-07-2023 வெள்ளி

**தேர்த்திருவிழா**
(ஐயப்பன், ஐயனார்)
05-08-2023 சனி

அபிசேகம்: காலை 7:00 மணி
பூசை: காலை 8:00 மணி
வசந்தமண்டப பூசை: காலை 9:00 மணி
தேர் புறப்பாடு: 11:00 மணி
பச்சை சாத்தல்: 12:00 மணி



**சப்பறம் (ஐயப்பன், ஐயனார்)**
04-08-2023 வெள்ளி
மாலை 7:30 மணி

**தீர்த்தம் (ஐயப்பன், ஐயனார்)**
06-08-2023ஞாயிறு

**அபிசேகம்**
காலை 8:30 மணி
வசந்தமண்டப பூசை 10:30 மணி
தீர்த்த உற்சவம் 11:00 மணி

**பூங்காவனம்:**
ஐயனார் திருக்கல்யாணம்
07-08-2023 திங்கள் மாலை

**வைரவர் மடை**
08-08-2023 செவ்வாய் மாலை

## கிரியா கால நேர விபரங்கள்

| காலை | | மாலை | காலை | | மாலை |
|---|---|---|---|---|---|
| 7:00 | நடை திறத்தல் | 4:30 | 10:30 | யாகபூசை, ஸ்தம்பபூசை | 7:00 மணி |
| 8:00 | பூசை | 5:00 | 11:30 | வசந்த மண்டப பூசை | 7:45 மணி |
| 9:00 | ஸ்நபனாபிசேகம் | 5:30 | 12:00 | சுவாமி வீதி உலா | 8:30 மணி |
| 10:00 | பூசை | 6:30 | 1:45 | நடை சாத்தல் | 9:15 மணி |

விழா காலங்களில் அடியார்கள் தவறாது ஆலயத்திற்கு வருகை தந்து விழாக்களைச் சிறப்பித்து ஐயப்பனின் திருவருள் பெற்றுச் செல்லுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். உற்சவத்திற்குரிய அபிஷேக, பூசைத் திரவியங்கள் ஆகியவற்றை அடியார்கள் தந்துதவலாம்.

ஸ்ரீ
ஐயனார் துணை



காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிட ரெண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரண புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுற வந்தான்

# கனடிய அனலைதீவு ஐயனார் ஆலயம்

**கனடிய அனலைதீவு ஸ்ரீபூரணை புட்கலாம்பிகா சமேத ஹரிஹர புத்திர ஐயனார் திருக்கோயில்**

22 Goodmark Place #13, Etobicoke, ON, M9W 6R2, Tel : 416.679 9899
Facebook : ANALAITIVU IYANAR TEMPLE OF CANADA

## சோபகிருது வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம்

**29.07.2023 தொடக்கம் 08.08.2023 வரை**

ஐயன் மெய்யடியார்களே

நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் ஆடித்திங்கள் 13ம் நாள் 29.07.2023 சனிக்கிழமை துவாதசி திதியும் கேட்டை நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ பூரணை புட்கலை சமேத ஹரிஹர புத்திர ஐயனார் பெருமானுக்கு பகல் 12.00 மணிக்கு துவஜாரோகணமாகி (கொடியேற்றம்) 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

## மஹோற்சவ கால நிகழ்வுகள்

| கொடியேற்றம் 29.07.2023 | வேட்டை, சப்பறம் 05.08.2023 | தேர்த்திருவிழா 06.08.2023 |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 29.07.2023 | சனிக்கிழமை கொடியேற்றம் | 05.08.2023 | சனிக்கிழமை 8ம் திருவிழா வேட்டைத்திருவிழா, சப்பரத்திருவிழா |
| 30.07.2023 | ஞாயிற்றுக்கிழமை 2ம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம் | 06.08.2023 | ஞாயிற்றுக்கிழமை 9ம் திருவிழா தேர்த்திருவிழா |
| 31.07.2023 | திங்கட்கிழமை 3ம் திருவிழா | 07.08.2023 | திங்கட்கிழமை 10ம் திருவிழா, தீர்த்தோற்சவம், கொடியிறக்கம் |
| 01.08.2023 | செவ்வாய்க்கிழமை 4ம் திருவிழா | 08.08.2023 | செவ்வாய்க்கிழமை மாலை 05.00 பூங்காவனம் திருக்கல்யாணம் |
| 02.08.2023 | புதன்கிழமை 5ம் திருவிழா | 09.08.2023 | புதன்கிழமை வைரவர் மடை |
| 03.08.2023 | வியாழக்கிழமை 6ம் திருவிழா | | |
| 04.08.2023 | வெள்ளிக்கிழமை 7ம் திருவிழா | | |

**முக்கிய குறிப்பு : கொடியேற்றம், வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா தீர்த்தத்திருவிழா தவிர்ந்த ஏனைய நாட்களில் பூசை நேரம்**

| கொடியேற்ற நிகழ்வு | பகல் திருவிழா | இரவு திருவிழா |
|---|---|---|
| 06.00 மணி காலை பூசை | 07.00 மணி காலை பூசை | 04.45 மணி உருத்திர கும்ப அபிஷேகம் |
| 07.00 மணி நவகலச அபிஷேகம் | 08.00 மணி நவகலச அபிஷேகம் | 06.30 மணி விஷேட பூசை |
| 09.00 மணி விஷேட பூசை | 10.00 மணி ஸ்தம்ப பூசை | 07.00 மணி ஸ்தம்ப பூசை |
| 10.00 மணி வசந்த மண்டப பூசை | 11.30 மணி வசந்த மண்டப பூசை | 08.00 மணி வசந்த மண்டப பூசை |
| 12.00 மணி கொடியேற்றம் | 01.00 மணி பிரசாதம் வழங்கல் | 09.30 மணி பிரசாதம் வழங்கல் |

தேர்த்திருவிழா : காலை 8.30 மணி வசந்த மண்டபபூசை காலை 10.30 மணி சுவாமி தேரில் எழுந்தருளல்

சப்பரத்திருவிழா மற்றும் தேர்த்திருவிழாவின் போது காவடி, கற்பூரச்சட்டி, பாற்குடம் மற்றும் நேர்த்திகள் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்யவும். மேலும் ஒவ்வோர் இரவுத் திருவிழாவின் போதும் நாதஸ்வர, தவில் இசைக்கச்சேரி மற்றும் இன்னிசை, பரதநாட்டிய நிகழ்வுகளும் இடம் பெறும்.

சக ஆலய அறங்காவலர்கள், குருமார்கள் மற்றும் அடியார்கள் அனைவரையும் திருவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆலய குருமார்கள் – சிவாகம பிரவீணா ஐயப்பா சேவா ரத்னா சிவ ஸ்ரீ பிரசாத் குருக்கள், ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் சர்மா

மஹோற்சவகுரு
ஆகமகலாரத்ணம், ஆகமபிரவிணா கிரியா தத்வநிதி, கிரியா பூஷணம் சாதகலா மணி, அலங்கார பூஷணம்,
**ஈசான சிவாச்சார்யார் சிவஸ்ரீ சி. சந்திரகுமாரகுருக்கள்**
(முன்னாள் குருமணி - ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தானம் - கொழும்பு)

திருவிழா நாட்களில் உங்களால் இயன்ற பால், தயிர், நெய், பூ, அன்னதானப் பொருட்கள்
அபிஷேக திரவியங்களை ஆலயத்திற்கு வழங்கி ஐயனார் அருள் பெற வேண்டுகின்றோம்.
“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”.

சுபம்

இங்ஙனம்
ஆலய அறங்காவலர் சபை, உபயகாரர்கள்

# சிதறிப் போன மக்கள்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



காற்றுவழிக் கிராமங்களைப் பற்றிய எனது கடந்தவாரக் கட்டுரையானது பெருமளவுக்கு தீவக மக்களால் வரவேற்கப்பட்டிருக்கிறது. எனினும் ஒரு பகுதியினர் அதற்கு வேறு விதமாக வியாக்கியானம் தருகிறார்கள். கோவில்களில் காசைக் கொட்டுவது என்பது ஒரு விதத்தில் ஊரில் தனது முதன்மையை நிலைநாட்டும் நோக்கத்தையும் கொண்டது என்று அவர்கள்



கூறுகிறார்கள். ஒரு காலம் நீருக்கு கஷ்டப்பட்ட கிராமத்தில் இருந்து பொருளாதார மற்றும் போர்க் காரணங்களுக்காக ஊரை விட்டுப் போன மக்கள் இப்பொழுது அதே ஊரில் கற்பனை செய்ய முடியாத ஒரு தொகையைச் செலவழித்து ஒரு கோவிலைப் புனரமைப்பது என்பது தங்களால் முடியும் என்பதனைச் சாதித்துக்காட்டும் ஒரு நிகழ்வாக ஏன் எடுக்கக் கூடாது என்றும் கேட்கப்படுகிறது.

அதில் உண்மை உண்டு. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாங்கள் தேடிய செல்வத்தை எப்படி ஊரில் செலவழிப்பது என்பதை குறித்து பொருத்தமான அபிவிருத்தி திட்டங்கள் இல்லாத வெற்றிடத்தில் தான் கோவில்களில் முதலீடு செய்யும் ஒரு நிலைமை ஏற்படுகின்றது. கோவில்களை புனரமைப்பது என்பது அவர்களுடைய மத நம்பிக்கை சார்ந்த விடயம். ஆனால் ஊரின் பெருமையை வெளி உலகத்திற்கு காட்டுவது என்பது அதுவும் ஊர் என்பது ஊருக்கு வெளியே வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் சிதறிப்போயிருக்கும் ஒரு பின்னணியில், ஊருக்கு வெளியே இருக்கும் ஊரவர்களுக்கு தமது முதன்மையை பெருமையை நிலைநாட்டுவது என்று பார்க்கும் பொழுது, அங்கே ஊரைக் கட்டியெழுப்புவதா அல்லது குறிப்பிட்ட கொடையாளி தன்னுடைய பெயரை கட்டியெழுப்புவதா என்ற கேள்விக்கு விடை முக்கியம்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் பழைய மாணவர் சங்கங்களைப் போலவே ஊர்ச் சங்கங்கள் உண்டு. இச் சங்கங்கள் பல ஓரளவுக்கு ஊரைக் கட்டியெழுப்புகின்றன. ஆனால் அதனை ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற மையப்புள்ளியில் இருந்து சிந்தித்துச் செய்வதாகத் தெரியவில்லை. ஏனெனில் தமிழ்க் கட்சிகளை போலவே ஊர் சங்கங்களுக்கிடையிலும் ஐக்கியம் இல்லை.ஒரே ஊருக்கு வெவ்வேறு புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வேறு வேறு சங்கங்கள் உண்டு. அவற்றுக்கு இடையில் ஐக்கியம் இல்லை. புலம் பெயர்ந்த தரப்பில் உள்ள கொடையாளிகள் அல்லது சங்கங்கள் ஊருக்கு தாங்கள் செய்யும் நற்காரியங்களுக்குரிய பாராட்டுக்கள் தங்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்று சிந்திப்பதும் ஒரு காரணம். அதில் ஒர் ஈகோ உண்டு. ஆனால் அந்த ஈகோவை பொசிட்டிவ்வான விதத்தில் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களுக்குள் உள்வாங்கலாம். அதை யார் செய்வது? ஊர்ச் சங்கங்களை ஏதோ ஒரு பொது நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் யார் ஒன்றாக்குவது?

புலம்பெயர்ந்த தமிழர்கள் பெரும்பாலானவர்கள் ஊர் நினைவுகளை ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறார்கள். ஒருவிதத்தில் ஊர்களையும் ஆங்காங்கே ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறார்கள். இவ்வாறு தாம் ஊரை விட்டுப் பிரிந்த காலத்தையும், ஊர் பற்றிய தமது நினைவுகளையும் ஊறுகாய் போட்டு வைத்திருக்கும் ஒரு சமூகத்தின் ஊர்ப் பற்று என்பது ஒரு தேச நிர்மாணத்தைப் பொறுத்தவரை அடிப்படையான ஓர் ஆக்க சக்தி. ஆனால் அதை ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் திரட்டப்பட்ட சக்தியாக மாற்றுவதற்கு தேச நிர்மாணம் என்ற அடிப்படையில் ஒரு பொதுவான வேலைத் திட்டம் இருக்க வேண்டும்.



ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக அவ்வாறான வேலைத் திட்டங்கள் எவையும் கிடையாது. ஒரு மையத்தில் இருந்து முடிவெடுத்து ஒரு மையத்திலிருந்து காசை திரட்டி அதை ஆக்கபூர்வமான பொருத்தமான வழிகளில் தேச நிர்மானத்தை நோக்கி முதலீடு செய்வதற்கு தமிழ்மக்கள் மத்தியில் இப்பொழுது ஒன்றிணைந்த மையங்கள் கிடையாது. மாறாக சிதறிப் போன சிறு மையங்கள் தான் உண்டு. நாட்டில் ஒவ்வொரு கட்சியும் தனது வாக்கு வங்கியை எப்படிக் கட்டியெழுப்பலாம் என்று சிந்திக்கின்றதோ அப்படித் தான். எனவே காற்று வழிக் கிராமங்களில் கோவில்களைப் புனரமைக்கும் செயற்பாடுகள் நமக்கு எதை உணர்த்துகின்றனவென்றால், தமிழர்கள் தேவைகளையும் வளங்களையும் பொருத்தமான விதங்களில் இணைக்க முடியாத ஒரு மக்களாக ஒரு மையத்திலிருந்து திட்டமிட முடியாத மக்களாகக் காணப்படுகிறார்கள் என்பதைத் தான்.

இதனைக் கோவில்களை புனரமைக்கும் விடயத்தில் மட்டுமல்ல, ஐநாவை அணுகுவது இந்தியாவை அணுகுவது அமெரிக்காவை அணுகுவது ஐரோப்பாவை அணுகுவது உலகப் பொது நிறுவனங்களான பன்னாட்டு நாணய நிதியம், உலகவங்கி போன்றவற்றை அணுகுவது போன்ற எல்லா விடயங்களிலுமே தொகுத்துக் காணலாம். தமிழ் மக்கள் ஒரு மையம் இல்லாத மக்களாகவும் மையத்தில் இருந்து முடிவெடுக்காத மக்களாகவும் காணப்படுகிறார்கள். இதற்கு ஆகப்பிந்திய அண்மைய உதாரணங்களை இங்கே சுட்டிக்காட்டலாம்.

முதலாவதாக உலகத்தமிழர் பேரவை என்று புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு அண்மையில் அமெரிக்கப் பிரதானிகளைச் சந்தித்தது. அச்சந்திப்பில் கலந்து கொண்ட அமெரிக்கப் பிரதானிகளை வைத்து பார்த்தால், அது ஒரு பெறுமதியான சந்திப்பு. ஜெனிவாக் கூட்டத்தொடரை முன்னிட்டு நடந்த அச் சந்திப்பானது புலம்பெயர்ந்த தமிழர்களை அமெரிக்கா ஏதோ ஒரு நோக்கத்தோடு கையாள விரும்புகிறது என்ற செய்தியை துலக்கமான விதங்களில் வெளிப்படுத்தியது.

இரண்டாவது பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழக அமைப்பாளர் அண்ணாமலையை லண்டனுக்கு அழைத்தமை. பிரித்தானியத் தமிழர் பேரவை அந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. அதனை அவர்கள் உறவுப் பாலம் என்று அழைத்தார்கள். அது தொடர்பில் முக்கியமாக இரண்டு விமர்சனங்கள் எழுந்தன.ஒன்று பாரதிய ஜனதாவின் இந்துத்துவா நிலைப்பாட்டை மேற்படி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பும் ஏற்றுக் கொள்கிறதா என்பது.

இரண்டாவது பாரதிய ஜனதா பிரமுகர்கள் இப்பொழுதும் 13ஆவது திருத்தத்தைத்தான் ஒரு தீர்வாக முன் வைக்கிறார்கள் என்பது. அதாவது பாரதிய ஜனதாவை நெருங்கி செல்வதன் மூலம், ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் வெளியுறவு நிலைப்பாட்டில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை என்பது. குறிப்பாக.பாரதிய ஜனதாவை இந்துத்துவா என்ற கொழுக்கி மூலம் கவர முயற்சிப்பதன் விளைவாக தாயகத்தில் எத்தனை இந்துக் கோவில்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது? அல்லது அடாத்தாகக் கட்டப்படும் எத்தனை விகாரைகளை அகற்ற முடிந்திருக்கிறது? என்றெல்லாம் அவர்கள் கேட்கிறார்கள்.

மூன்றாவது, ஐரோப்பாவை மையமாகக் கொண்டியங்கும் உலகத் தமிழர் இயக்கம் என்று ஓர் அமைப்பு தொடர்ச்சியாக ஐநா விவகாரங்களில் ஈழத் தமிழர்கள் சார்பாக செயற்பட்டு வருகின்றது. கடந்த பல ஆண்டுகளைத் தொகுத்து பார்த்தால் ஐநாவில் ஈழத்தமிழர்களை அந்த அமைப்புத் தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா என்ற ஒரு தோற்றம் உண்டாகக் கூடும். அந்த அமைப்பின் யூடியூப்பில் காணக்கிடைக்கும் காணொளிகளிலும் அதை உணரக்கூடியதாக உள்ளது.

நாலாவது லண்டனை மையமாகக் கொண்ட மூன்று அரசியல் செயற்பாட்டாளர்கள் இந்தியாவைக் கையாள்வது என்று ஒரு நிகழ்ச்சி திட்டத்தை முன் வைத்து தொடர்ச்சியாக இந்தியாவில் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி வருகிறார்கள். இதுவரையிலும் மூன்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் தாயகத்திலிருந்து ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்குபற்றி வருகிறார்கள். இந்த அமைப்பும் பாரதிய ஜனதாவை நெருங்கிச் செல்வதன் மூலம் ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று சிந்திப்பதாக தெரிகிறது.

இப்பொழுது மேற்சொன்ன அனைத்தையும் தொகுத்துப் பார்க்கலாம். இந்தியாவை அணுகுவது அமெரிக்காவை அணுகுவது ஐரோப்பாவை அனுப்புவது ஐநாவைக் கையாள்வது போன்ற அனைத்துமே வெளியுறவுச் செயற்பாடுகள்தான். அதாவது ஒரு வெளிவகாரக் கொள்கையை முன் வைத்து அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள். வெளிவிவகாரம் எனப்படுவது ஒரு சக்தி மூலம் (Power source) ஏனைய சக்தி மூலங்களோடு இடையூடாடுவது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அப்படிப்பட்ட சக்தி மூலங்கள் கிடையாது. தாயகத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. மெய்யான சக்தி மூலங்கள் அவைதான்.ஆனால் அக்கட்சிகளிடம் வெளியுறவுக் கட்டமைப்பு எதுவும் கிடையாது. அவ்வாறு தாயகத்திலிருந்து பொருத்தமான வெளியுறவு செயற்பாடுகளை முன்னெடுக்க தேவையான வெளியுறவு தரிசனங்களோ கட்டமைப்புகளோ (20ம் பக்கம் பார்க்க)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த
**அமரர் திரு ஆறுமுகம் வடிவேலு**

நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த
**திருமதி கண்மணி வடிவேலு**

## 03 ஆகஸ்ட் 2023

நிகரில்லா எங்கள் சுவாசம் நீயே தாயே!
எங்கள் மனம் தினம் ஏங்கும் அன்புத் தாயே...
சிந்திய கண்ணில் சிதறியது உங்கள் நினைவுகள்
சத்தம் இழந்து சோகமாய் உங்கள் பிள்ளைகள்
பந்தம் இருந்தும் பாராட்ட பாசமாய் நீங்கள் இல்லை
அந்தரிக்கும் எமக்கு ஆறுதலாய்
உங்கள் வார்த்தையுமில்லை
எம் எண்ணத்தில் ஏக்கத்தில் தூக்கத்திலும்
நீங்கள் தான் அம்மா
ஓராண்டு நகர்ந்தாலும் அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அம்மா.
உங்களை நினைக்காத நொடிகளில்லை
விண்ணோடு சென்றாலும் விலை பேச முடியாத
கண்ணோடு மணியாக கருத்தில்
நீங்கள் இருப்பாய் அம்மா
தப்பென்ன சரியென்ன நிற்பாய் எங்கள் பக்கம்
நீங்கள் போகும் போது
நாம் இல்லையே உங்கள் பக்கம்.

உன்னை எவ்வடிவில் இனிக் காண்போம்?
எல்லாம் மாயை விம்பம் ஆகி போனது ஏன்?
தெய்வத்திற்கான இலக்கணம் பெற்றதாலோ என்னமோ
மண்ணுலகில் இருந்து விண்ணுலகிற்கு
இறைவன் உன்னை அழைத்துக் கொண்டான்
நீங்கள் இல்லா விடினும் உங்களின் ஆசீர்வாதம்
எங்களுடைய வாழ்க்கையை பிரகாசமாக்கும்

அம்மா! உங்கள் ஆன்மா மனமகிழ்வோடு
இறைவனிடம் ஒன்றினைந்து
தெய்வீக ஒளியை ஒளிரட்டும்!

அன்னாரின் ஆத்மா ஆண்டவன் சந்நிதியில் நித்தியமாய் நிம்மதியாய்
நீடுதுயில் கொள்ள ஆண்டனை அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உறவுகள், நண்பர்கள்

# கனேடிய எதிர்ப்புணர்வும் பின்னணியும்

கனடாவுக்கு எதிராக அண்மையில் கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பில் நடத்தப்பட்ட போராட்டங்களுக்குப் பின்னர், கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஷ், இந்த வாரம் வடக்கிற்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். கனேடிய உயர் ஸ்தானிகர் கொழும்பில் பணியைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், அவர் வடக்கிற்கு மேற்கொண்ட முதல் பயணம் இது.

இந்தப் பயணத்தின் போது அவர் அரசியல்வாதிகளைச் சந்திப்பதை விட பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படும் நிலையில் உள்ள சமூகத்தினரைச் சந்திப்பதிலும், அவர்களின் நிலையை அறிந்து கொள்வதிலும் கவனம் செலுத்தியிருந்தார்.

முக்கியமாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் சந்தித்துப் பேசியிருந்தார்.

அவர் அரசியல்வாதிகள் என்று சந்தித்தது இரண்டு பேரைத் தான். யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், முல்லைத்தீவில் ரவிகரன் ஆகியோர் தான் அவர்கள்.

எரிக் வோல்ஷ் உடனான சந்திப்பின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வடக்கு, கிழக்கு பௌத்த மயமாக்கப்படுவது, வடக்கு கிழக்கில், போர் முடிவுக்கு வந்த பின்னர், புதிதாக அமைக்கப்பட்ட, அமைக்கப்படுகின்ற 71 பௌத்த விகாரைகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரனுடனான சந்திப்பில், குறிப்பாக குருந்தூர்மலையில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள விகாரை, மற்றும் அதனை ஒட்டியுள்ள சர்ச்சைகள், சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பான அறிக்கை ஒன்றையும் கனேடிய உயர் ஸ்தானிகரிடம் கையளித்திருந்தார் ரவிகரன்.






வடக்குப் பயணத்தை முடித்துக் கொண்டு கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் கொழும்பு திரும்பியதும், குருந்தூர்மலையில் அடாத்ததாக அமைக்கப்பட்டுள்ள குருந்து விகாரையின் சங்கநாயக்கர் என்று அழைத்துக் கொள்ளும் பௌத்த பிக்கு, கனேடியத் தூதுவரைச் சந்தித்து, முல்லைத்தீவுக்குச் சென்று இனவாதிகளைச் சந்தித்தமைக்கு (ரவிகரன்) எதிர்ப்பு வெளியிட்டதுடன், அறிக்கை ஒன்றையும் வழங்கியிருந்தார்.

குருந்தூர்மலை ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்களில் ரவிகரன் முக்கியமானவர் என்பதால், அவரை இனவாதியாக பௌத்த பிக்குகள் மாத்திரமன்றி, சரத் வீரசேகர போன்ற சிங்களப் பேரினவாதிகளும் அடையாளப்படுத்துகின்றனர். அதனால் தான், வடக்கிற்குச் சென்று தமிழ் இனவாதிகளை, பிரிவினைவாதி களைச் சந்தித்த கனேடிய உயர் ஸ்தானிகரை வேண்டப்படாதவராக அறிவித்து, நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கொந்தளித்திருக்கிறார் சரத் வீரசேகர.

குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு, தனியே சிங்கள பௌத்த மதகுருமாரினால் மாத்திரம் முன்னெடுக்கப்படவில்லை. அதற்குப் பின்னால் இலங்கையின் இராணுவ இயந்திரமும் இருக்கிறது.

முன்னாள் படைத் தளபதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் சரத் வீரசேகர, சரத் பொன்சேகா போன்றவர்கள் குருந்தூர் மலை விவகாரத்தில் வெளிப்படுத்தும் கருத்துக்கள் மிக மோசமானவை. இப்போது இவர்களுடன் மேலும் மூன்று முன்னாள் படை அதிகாரிகள் இணைந்து கொண்டிருக்கின்றனர். லெப்.ஜெனரல் ஜகத் டயஸ், பிரிகேடியர் அதுல ஹேமச்சந்திர, லெப்.கேணல் அனில் சுமேத அமரசேகர ஆகிய மூவருமே அவர்கள்.

லெப்.ஜெனரல் ஜகத் டயஸ், இறுதிக் கட்டப் போரில், 57 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக பணியாற்றியவர். போர்க்குற்றச்சாட்டுகளையும் எதிர் கொள்பவர். போர் முடிந்த பின்னர் பெர்லினில் இராஜ தந்திரப் பதவியையும் வகித்தவர். இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அதிகம் வெளியில் தலைகாட்டாதவர்.

அவர் திடீரென ஏனைய இரு முன்னாள் படை அதிகாரிகளுடன் இணைந்து குருந்தூர்மலையில் அகழ்வுப்பணிகளை செய்யவென தொல்பொருள் திணைக்களத்தினால், நாட்டப்பட்ட எல்லைக் கற்களை அரசாங்கம் அகற்றுவதற்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருக்கிறார். நீதிமன்ற கட்டளையை மீறி குருந் தூர் மலையில் விகாரை கட்டப்பட்டது. அந்த விகாரையைக் கட்டியது இராணுவத்தினர் தான் என்று கல்வெட்டும் வைக்கப்பட்டது.

குருந்தூர்மலை ஆக்கிரமிப்பை உறுதி செய்வதற்காக, சரத் வீரசேகர, சரத் பொன்சேகா போன்றவர்கள் கடுமையான முயற்சிகளை முன்னெடுக்கின்ற நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஊடாக அந்த ஆக்கிரமிப்பை பாதுகாக்க முனைந்திருக்கிறார்கள் இவர்கள்.

இவ்வாறான ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்தமயமாக்கலும், சிங்களமயமாக்கலும் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படுவதை கனேடியத் தூதுவரிடம் சிறிதரனும், ரவிகரனும் வெளிப்படுத்தியிருந்தார்கள். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக் கொண்ட நாடு கனடா. இனப்படுகொலை நாள் தீர்மானத்தை கனடாவின் ஒன்டாரியோ மாகாண அரசும், நாடாளுமன்றமும் அங்கீகரித்திருக்கின்றன. இந்த அங்கீகாரம் இலங்கை அரசாங்கத்துக்கான ஒரு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

இலங்கையின் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளை – மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ தனது நாட்டுக்குள் நுழைவதற்குத் தடை விதித்துள்ள ஒரே நாடும் கனடா தான். இவையெல்லாம், சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு எரிச்சலைக் கொடுத்திருக்கின்ற விடயங்கள்.அதனால் தான், தமிழ் இனப்படுகொலை நாள் தீர்மானத்தை நிறைவேற்றிய கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் அண்மையில் இடம்பெற்றிருந்தன.

குருந்தூர்மலை ஆக்கிரமிப்புக்கு எவ்வாறு அரசாங்க ஆதரவுப் பின்னணியுடன் கூடிய திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட ஆதரவுத் தளம் உள்ளதோ, அதேபோன்றதொரு ஆதரவுத் தளம், கனடாவுக்கு எதிரான போராட்டங்கள், செயற்பாடுகளுக்கும் இருந்து கொண்டிருக்கிறது.

கனடாவுடன் அரசாங்கம் நேரடியாக முரண்பட விரும்பாத அதேவேளை கனடாவின் தீர்மானங்களையும், செயற்பாடுகளையும் ஏனைய அமைப்புகளைக் கொண்டு கண்டிக்கின்ற, எதிர்க்கின்ற வேலைத்திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றன.

கனடாவில் இரண்டு முக்கியமான பாதிக்கப்பட்ட புலம்பெயர் சமூகங்கள் உள்ளன. ஒன்று, இலங்கைத் தமிழர்கள். மற்றது சீக்கியர்கள்.

பஞ்சாபில் காலிஸ்தான் தனிநாடு கோரிப் போராட்டம் நடத்திய சீக்கியர்கள் இந்திய அரசாங்கத்தினால் ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்டனர்.

அங்கிருந்து தப்பிச் சென்று கனடாவில் குடியேறிய சீக்கியர்கள் இப்போது 8 இலட்சம் பேரைக் கொண்ட வலுவான சமூகமாக மாறியுள்ளனர். அவர்களில் ஒரு பகுதியினர் இன்னமும் காலிஸ்தான் தனிநாடு கோரிய போராட்டங்களை தீவிரமாக ஆதரிக்கின்றனர். அவர்கள் கனடாவில் பல பேரணிகள் நிகழ்வுகளையும் நடத்துகின்றனர்.

அண்மையில் காலிஸ்தான் ஆதரவு அமைப்பினர் நடத்திய பேரணியில் இந்திரா காந்தி படுகொலையை சித்திரிக்கும் ஊர்தி ஒன்று இடம் பெற்றிருந்தது. அதற்கு கனடாவிடம், இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்தியாவில் இருந்து எழுந்த எதிர்ப்புக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் ஆதரவு அளித்திருந்தார். அவர் விடுதலைப் புலிகளை காலிஸ்தான் ஆதரவு அமைப்புடன் ஒப்பிட்டு சமூக வலைத்தளப் பதிவுகளையும் இட்டிருக்கிறார்.

அது போல, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இரா.சம்பந்தன் அனுப்பிய கடிதம், காலிஸ்தான் பிரிவினைவாதிகளின் மொழிநடையை தழுவியதாக இருக்கிறது என்று புதிய மக்கள் முன்னணி எனும் கட்சி, இந்திய உயர் ஸ்தானிகருக்கு கடிதம் அனுப்பியிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து.க்களை இந்தியப் பிரதமர் கருத்தில் கொள்ளக் கூடாது என்றும் அந்தக் (20ம் பக்கம் பார்க்க)

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
ஜாதகம் பார்க்கப்படும்
கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, இலண்டன் வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில்.
பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.
சொன்னால் நடக்கும் வாக்கு சித்தி!
குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும் திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்.
கோ. காசிலிங்கம்
Phone: 437-925 5643 - Whatsapp: 437- 329 4164 - India: 0091 6384381120


# வடக்கில் மூடப்படும் பள்ளிக்கூடங்கள்! பின்னணி என்ன?

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



வடமாகாணத்தில் மாணவர் வரவின்மையினால் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று கடந்த மாதம் (24.06.2023) தெரிவித்திருக்கிறார் வடமாகாண ஆளுநர் பீ.எஸ். எம். சார்ள்ஸ். இதைப் போல கிழக்கு மாகாணத்திலும் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதற்குக் காரணம், பிறப்பு வீதம் குறைவாக இருப்பது



ஒன்று. இன்னொரு காரணம், கிராமங்களை விட்டு மக்கள் நகரங்களை நோக்கிச் செல்வதாகும். இப்படி ஆட்கள் குறைந்த பிரதேசங்களாக யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதி, வடமராட்சி கிழக்கு முதல், கிளிநொச்சியில் பூநகரி, அக்கராயன், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருக்கும் தொலைதூரக் கிராமப்புறங்களைக் குறிப்பிடலாம். அடுத்தது, தொடர்ச்சியாக நடைபெறும் புலப்பெயர்வு. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே சந்ததிப் பெருக்கத்தை உருவாக்கக் கூடியவர்களில் ஒரு தொகையினர் புலம் பெயர்ந்து சென்றிருப்பதாகும்.

இவையெல்லாம் ஆட்தொகையைச் சடுதியாகக் குறைக்கின்றன. மூடப்பட்ட பாடசாலைகளை விட ஏனைய பாடசாலைகளிலும் ஆண்டு ஒன்றில் சேர்க்கப்படும் மாணவரின் தொகை குறைவாகவே உள்ளது. இது இன்னும் நெருக்கடியை எதிர்காலத்தில் கொடுக்கப் போகிறது. இதைத்தான் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இந்த மாதிரியான காரணங்களினால் பாடசாலைகள்தானே மூடப்படுகின்றன என்று இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

இந்த ஆட்தொகை வீழ்ச்சியானது எதிர்காலத்தில் வடமாகாணத்தின் அல்லது தமிழ்ப் பிரதேசங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின், மாகாணசபை உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்திலும் வெட்டு விழப்போகிறது. கூடவே நிதி ஒதுக்கீடு, பிரதேச அபிவிருத்திக்கான வளப்பகிர்வு போன்றவற்றையும் மட்டிறுத்தக் கூடிய அபாயமுண்டு. ஏற்கனவே யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் ஏழாகக் குறைந்துள்ளது. இது மேலும் குறைவடையலாம். இது எதிர்காலத்தில் மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்களின் தொகையிலும் வெட்டை உண்டாக்கும்.

1980களில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். அன்றைய சனத்தொகையை இன்னும் யாழ்ப்பாணமும் எட்டவில்லை. வடமாகாணமும் எட்டவில்லை. அந்தச் சனங்களில் பாதிக்கும் மேலானவை வடக்கிற்கு வெளியே நாட்டின் பிற இடங்களிலும் புலம்பெயர் தேசங்களிலுமாகச் சிதறிப் பரந்துள்ளனர்.

இதற்கு யுத்தம் ஒரு காரணமாக இருந்தது. அதை விட சமூகப் பொருளாதாரக் காரணங்களும் வலுவாக உண்டு. இந்தச் சமூகப் பொருளாதாரக் காரணங்களை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். யுத்தம் முடிந்த பிறகும் புலப் பெயர்வு தொடர்கிறது என்றால், இடம்பெயர்வுக்கும் புலம்பெயர்வுக்கும் தனியே யுத்தம் மட்டும் தான் காரணம் என்றில்லை எனத் தெரிகிறது அல்லவா! புலப்பெயர்வுக்குக் காரணம், சாதிய வேறுபாடுகள், வேலை வாய்ப்பின்மை, உறுதியற்ற பொருளாதார நிலை, நாட்டின் ஸ்திரமற்ற அரசியற் சூழல் போன்றவை பிரதான காரணங்கள். இதில் பிரதேசங்களில் நிலவும் அபிவிருத்தியற்ற நிலையும் பொருளாதாரச் சிக்கல்களும் ஆட்தொகையைக் கணிசமாகக் குறைக்கின்றன. இது இரண்டு வகையான ஆட்தொகை வீழ்ச்சியை உண்டாக்குகிறது. ஒன்று, பிறப்பு வீதம் குறைவடைவதால் நிகழ்வது. இரண்டாவது, பிரதேசங்களை விட்டு மக்கள் வெளியேறுவதால் ஏற்படுவது.

பிறப்பு வீதம் குறைவடைவதற்கும் சில காரணங்கள் உண்டு. யுத்தத்தில் (போராட்டத்தில்) ஈடுபட்ட பல ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் இழப்பு இப்பொழுது பிறப்புக்கான வீதத்தைக் குறைக்கக் காரணமாகியுள்ளது. அத்துடன் கணிசமான தொகையில் அன்றைய இளையோர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தமையும் இன்னொரு காரணமாகும். இரண்டாவது முன்னரைப் போலல்லாமல் இப்பொழுது ஒன்று இரண்டு பிள்ளைகளுடன் குடும்பங்களைக் கட்டுப்படுத்துகின்ற போக்கு வலுப்பெற்றுள்ளது. மிஞ்சினால் மூன்று பிள்ளைகள். முன்னர் அப்படியல்ல, குறைந்தது, ஐந்து ஆறு பிள்ளைகளாவது ஒரு வீட்டில் (குடும்பத்தில்) இருக்கும்.

இவ்வாறான காரணங்கள் பாடசாலைகள், மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மட்டும் குறைப்பதல்ல. வடக்கின் சமூக பொருளாதார பிரதேச அபிவிருத்தியிலும் தாக்கத்தை உண்டாக்கப்போகிறது. அடையாளப் பிரச்சினைகளையும் உருவாக்கக் கூடிய சூழல் உண்டு.

இதனால் தான் அரசியல் முன்னெடுப்பில் விடுதலையுடன் கூடிய அபிவிருத்தியும் அபிவிருத்தியுடன் கூடிய விடுதலையும் என்ற கோரிக்கை தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டது. விடுதலைப்புலிகள் கூட ஓரளவுக்கு இந்தக் கண்ணோட்டத்திலும் இந்த நிலைப்பாட்டிலும் இருந்தனர். அவர்கள் பொருளாதார ரீதியாக தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வைத்திருக்க முயன்றதை இங்கே அறிந்தவர்கள் நினைவிற் கொள்ள முடியும். ஒன்றின்றி, ஒன்றில்லை.


அதாவது, அபிவிருத்தியில்லாத விடுதலை என்பது அடிமைத்தனத்தையே உருவாக்கும். அது பிறரில் தங்கியிருக்கும் நிலையைக் கொண்டு வரும் என்ற தெளிவுடன் இருந்தனர். இதற்காக அவர்கள் பல்வேறு வகையான கட்டமைப்புகளை உருவாக்கியிருந்தனர். துறைசார் நிபுணர்களையும் நிபுணத்துவ அறிவையும் நாடினர்.

இதற்கு களப்பணி அவசியமாகும். புலிகளிடம் அந்தக் களப்பணி தாராளமாக இருந்தது. புலிகளுக்கு முந்திய சூழலில் பல இயக்கங்கள் இயங்கிய 1980 களின் நடுப்பகுதியில் கூட விடுதலைக்கான போராட்டம் என்பது, பொருளாதாரப் பாதுகாப்பையும் அதற்கான ஏற்பாடுகளையும் கொண்டதாகவே இருந்தது. இயக்கங்கள் பல இடங்களிலும் பண்ணைகளையும் தொழில் மையங்களையும் உருவாக்கியிரு ந்ததுடன், பொருளாதாரச் சிந்தனையை முக்கியப்படுத்திச் செயற்பட்டதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஆனால், மிதவாத அரசியல் இதற்கு மாறாகவே இயங்கியது. இயங்கிக் கொண்டிருக்கிறது. அது வெறுமனே வாய்ப்பேச்சு, ஊடக அறிக்கை, அரசியற் கோரிக்கை என்ற அளவில் எந்தப் புதுமையும் வினைத்திறனும் இல்லாமல் காய்ந்து சுருங்கிக் கிடக்கிறது.

அபிவிருத்தியைப் பற்றிப் பேசினால் அது, அரசுடன் ஒத்தோடுவது, இனவிடுதலைக்கு எதிரானது என்ற கருத்தை உற்பத்தி செய்து தமிழ் அரசியல், ஊடகப் பரப்பில் வலுப்பெற வைத்துள்ளது. களப்பணியை முற்றாகவே புறக்கணித்து விட்டது. வெறுமனே அரசியல் சுலோகங்களை முன்னிறுத்துவதன் விளைவாக உருவாகிய நிலை இது. அந்த அரசியற் சுலோகங்களில் அரச எதிர்ப்புணர்வு மட்டும் வலுவுட்டப்பட்டது. இறுதியில் அரச எதிர்ப்பு அல்லது எதிர்ப்பு அரசியல் மட்டுமே விடுதலை அரசியல் என்று கட்டமைக்கப்பட்டது. இதற்கு இனவாத உணர்வு நன்றாகத் தீனி போடுகிறது. அல்லது இனவாத உணர்வை நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறது மிதவாத அரசியல்.

ஆனால் விடுதலைக்கான அரசியல் என்பது இதற்கு அப்பாலானது. அது சமூக பொருளாதார விருத்தியையும் உள்ளடக்கியது. மட்டுமல்ல, தேசியம் என்ற கருதுகோள் ஒரு கற்பிதமாக இருப்பினும் அதற்குக் கூறப்படும் வரன்முறையான விளக்கத்தின் அடிப்படையில், மொழி, நிலம், பண்பாடு போன்றவை அதற்கு முக்கியமானவையாகும்.



இவற்றின் செழுமையும் வளர்ச்சியும் வரலாற்றுத் தொடர்ச்சியும் சரியாகப் பேணப்பட்டால்தான் குறித்த தேசியம் வலுவானதாக இருக்கும். தமிழ்த்தேசியம் என்ற கருதுகோளை முன்னிறுத்துவோரில் பலரும் அதனுடைய நிலத்தைக் குறித்தும் மொழி மற்றும் பண்பாட்டைக் குறித்தும் பேசும் அளவுக்கு, அந்த மக்களுடைய பொருளாதாரப் பாதுகாப்பு, பொருளாதார வலுபற்றி ஆழமாகச் சிந்திப்பது குறைவு. ஆனால், உண்மையில் இவை மிகமிக அவசியமானவையாகும். அதிலும் பொருளாதார அடிப்படை தளர்ந்து, பிரதேசங்களின் அபிவிருத்தி இல்லாதிருக்குமானால் மக்கள் அந்தப் பிரதேசங்களை விட்டு தாமாகவே வெளியேறுவர். மக்கள் வெளியேறினால் அனைத்தும் பாதிக்கப்படும். அதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

மக்கள் தங்களுடைய பிரதேசங்களில் வாழ வேண்டுமென்றால் அவர்களுக்கு நல்ல பாடசாலைகள் வேண்டும். நல்ல வீதிகள் தேவை. நல்ல மருத்துவமனைகளும் மருத்துவச் சேவைகளும் அவசியம். தொழில்வாய்ப்புகள் சரியாக இருக்க வேண்டும். பொருளாதார விருத்திக்கான ஏற்பாடுகள் சீராக அமைய வேண்டும். போக்குவரத்தும் சமூகப் பாதுகாப்பும் அவசியம். இவையெல்லாம் இல்லையென்றால் என்ன தான் பற்றும் பிடிப்புமிருந்தாலும் சொந்த வீட்டையும் பிறந்த மண்ணையும் விட்டு விட்டே பெயர்ந்து போய் விடுவார்கள். இதைத் தமிழ் மிதவாதத் தலைமைகளால் புரிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய வர்க்க நிலை அப்படியானது. காரணம், தமிழ் மிதவாத அரசியல் தலைமைகள் ஒருபோதும் அந்த மக்களோடு மக்களாக தங்கள் பிரதேசங்களில் வாழ்ந்ததே இல்லை. அவர்களுடைய வாழ்க்கை முறையும் அரசியல் உறவும் வேறானது. அது மக்களுக்கு வெளியே அந்நியமானது.

போராளிகள் அப்படியல்ல. அவர்கள் மக்களுடன் மக்களாக மக்களின் பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள். போராட்ட அரசியல் பாரம்பரியத்தில் வந்தவர்கள் இன்னும் அதனைப் பேணுகிறார்கள். அவர்களிடம் சில குறைபாடுகளிருந்தாலும் மக்களுக்கான விடுதலை, பிரதேச அபிவிருத்தி, சமூகப்பொருளாதாரக் கட்டமைப்பு, சமூக நீதி போன்றவற்றில் கூடிய கரிசனை உண்டு. இந்தத் துல்லியமான வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மிதவாதத் தலைமைகளிடம் உள்ள வர்க்க வேறுபாட்டினால் தான் மக்களுக்கு அபிவிருத்தி வேண்டாம் என்ற துணிபு அவர்களுக்கு வந்தது. அதாவது எந்த நிலையிலும் தாம் பாதிக்கப்பட மாட்டோம் என்ற துணிபு. ஒரு சிறிய உதாரணம், 1958, 1977, 1981, 1983 போன்ற இன வன்முறைகளில் எல்லாம் எந்த ஒரு தமிழ்த் தலைவரும் பாதிக்கப்படவில்லை. எந்தத் தமிழ் அரசியல்வாதிக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திருச்செல்வம், நாகநாதன், சுந்தரலிங்கம், ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்றவர்களுடைய வீடுகளும் சொத்துகளும் கொழும்பிலும் தென்பகுதியிலும் இருந்தன. அவற்றிற்கு ஒரு சிறிய சேதமும் ஏற்படவில்லை. அவர்கள் அகதியாகவும் இல்லை.

ஏனென்றால் அவர்களுடைய தரிப்பும் வாழ்க்கைப் புலமும் கொழும்பை மையப் படுத்தியது. அல்லது நகரங்களை. வர்க்க உறவை அடிப்படையாகக் கொண்டது.

(20ம் பக்கம் பார்க்க)

# டெல்லியில் ரணில்:- 13 மைனஸ்!

டெல்லிக்கு போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் கடந்த 18ஆம் தேதி செவ்வாய்க்கிழமை.ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளுக்கு எதைத் தர முடியும் என்று கூறினாரோ அதைத் தான் இந்தியப் பிரதமரின் முன்னிலையில் வைத்தும் திரும்பக் கூறிவிட்டு வந்திருக்கிறார். தமிழ்க் கட்சிகளுக்கு அவர் சொன்னது போலீஸ் அதிகாரம் இல்லாத ஒரு மாகாண சபை. போலீஸ் அதிகாரம் என்பது என்ன? ஒரு சட்ட மன்றம் தான் உருவாக்கிய சட்டங்களை அமல்படுத்துவதற்கான ஓர் அதிகாரக் கட்டமைப்புத்தான். அதை இன்னும் தெளிவாகச் சொன்னால், ஒரு சட்ட மன்றத்தின் அதிகாரத்தை அமுல்படுத்தும் பிரிவு போலீஸ் தான். உலகம் முழுதும் அதுதான் நிலைமை. அந்த அதிகாரம் இல்லையென்றால், நிதி அதிகாரம், கல்வி அதிகாரம், காணி அதிகாரம் உட்பட வேறு எந்த அதிகாரம் இருந்தாலும் பலன் இல்லை. எனவே போலீஸ் இல்லாத மாகாண சபை என்பது 13 மைனஸ் தான்.

அதைத் தான் தன்னால் தர முடியும் என்று ரணில் தெளிவாகத் திட்டவட்டமாகத் தமிழ்க் கட்சிகளுக்குச் சொன்னார். 2005இல் நான் தர முற்பட்டதை நீங்கள் நிராகரித்தீர்கள். அதே தவறை இந்த முறையும் செய்யாதீர்கள் என்று ஒரு விதத்தில் எச்சரிக்கையாகவும் அவர் அதைச் சொன்னார். கொழும்பில் வைத்து அவர் அதைத் தமிழ்க் கட்சிகளுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் சேர்த்துத் தான் சொன்னார். இந்தியாவை நோக்கி 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்ட கட்சிகளுக்கும் 13ஐத் தீர்வின் தொடக்கமாக ஏற்றுக் கொண்ட கட்சிகளுக்கும், 13 வேண்டாம், கூட்டாட்சி தான் வேண்டும் என்று கேட்ட கட்சிகளுக்கும் சேர்த்து அவர் அதைச் சொன்னார்.

இந்தியாவில் வைத்தும் அதை அவர் மீளச்சொன்னார் இந்த வாரம் நான் முன் வைத்த விரிவான முன்மொழிவு என்று அவர் அதைக் கூறுகிறார். மட்டுமல்ல, வடக்கு அபிவிருத்தித் திட்டம் என்ற வார்த்தையை அவர் பயன்படுத்துகிறார். வடக்கு-கிழக்கு என்று தமிழர்களின் தாயகத்தை இணைத்துக் கூறவில்லை.

எனவே ரணில் மிகத் தெளிவாக இருக்கிறார். அதை விடக் கூடுதலாக அவர் துணிச்சலாகவும் இருக்கிறார். கொழும்பில் சொன்னதையே டெல்லியில் வைத்தும் சொல்கிறார். கோத்தாபய தனது முதலாவது இந்திய விஜயத்தின் போதும் இனப்பிரச்சினை தொடர்பில் இதே தொனியில் தான் பேசினார். அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்தவர். ஆனால் ரணில் என்ன துணிச்சலில் அவ்வாறு கூறுகிறார்? அவருடைய துணிச்சலுக்கு பின்வரும் காரணங்கள் உண்டு.

முதலாவது காரணம் எல்லாப் பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்திருக்கக் கூடிய ஒரு தலைவர் தான் மட்டுமே என்ற துணிச்சல். எந்தப் பேரரசையும் அதிகம் நெருங்கிச் செல்ல வேண்டிய தேவை, வாழ்க்கைப் பின்னணி தனக்கு இல்லை என்று அவர் நம்புகிறார். ராஜபக்ஸக்களோடு ஒப்பிடுகையில் அது அவருடைய பலந்தான்.அதனால் தான் இந்தியா அவர் பதவிக்கு வருவதை முதலில் விரும்பவில்லை. டளஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு தமிழ்க் கட்சிகளைக் கேட்டது.

இரண்டாவது துணிச்சல், தமிழ்க் கட்சிகளால் போராட முடியாது என்று அவர் நம்புகிறார். கூட்டாட்சி அல்லது முழுமையான 13 அல்லது கொன்ஃபெடரேஷன் போன்ற எந்த கோரிக்கைகளை முன் வைத்தாலும், எந்த ஒரு தமிழ்க் கட்சியும் அதற்காக போராடும் திராணியோடு இல்லை என்பதை அவர் சரியாகக் கணித்து வைத்திருக்கிறார். மாறாக சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக ஆங்காங்கே தெட்டந் தெட்டமாகப் போராடத்தான் தமிழ்க் கட்சிகளால் முடியும் என்றும் அவர் சரியாகக் கணித்து வைத்திருக்கிறார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்தைப் போல அல்லது எழுக தமிழ், பொங்கு தமிழ் களைப் போல பெருமளவு மக்களைத் திரட்டிப் போராடும் நிலைமையில் தமிழ்க் கட்சிகள் இல்லை என்பதை அவர் சரியாகக் கணித்து வைத்திருக்கிறார். மேலும் தமிழ்க் கட்சிகளின் சிறு திரள் போராட்டங்களின் விளைவாக, தனக்குச் சிங்கள பௌத்த வாக்குகள் அதிகம் சேரும் என்பதும் அவருடைய கணிப்பு. இப்பொழுது 13 மைனஸ் என்று கூறுவதன் மூலமும் அவருக்கு சிங்கள பௌத்த வாக்குகள் திரளும்.

மூன்றாவது துணிச்சல், இந்தியாவுக்குள்ள வரையறைகளை அவர் விளங்கி வைத்திருக்கிறார். 13ஆவது திருத்தம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் விளைவு தான். ஆனால் அது தமிழ் மக்களின் தெரிவு அல்ல. மிகச் சரியான வார்த்தைகளில் சொன்னால், அது இந்திய இலங்கை அரசுத் தலைவர்களின் குழந்தை. எனவே அதற்கு இந்தியாவும் இலங்கையுந் தான் பொறுப்பு. அதை அமுல்படுத்துவதற்கு இரண்டு நாடுகளுந் தான் பொறுப்பு. ஆனால் ஒன்றேகால் இலட்சம் இந்தியப் படைகளை வைத்துக் கொண்டு அதைச் செய்ய இந்தியாவால் முடியவில்லை. கடந்த 36 ஆண்டுகளாக 13ஐ முழுமையாக அமல்படுத்துமாறு இலங்கை மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க இந்தியாவால் முடியவில்லை. அல்லது இந்தியா விரும்பவில்லை. குறிப்பாக போர் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை என்று ஒரு சாட்டைச் சொன்னால். 2009க்குப் பின் கடந்த 14 ஆண்டுகளாக ஏன் அதனைச் செய்ய முடியவில்லை?

13ஆவது திருத்தத்தை மட்டுமல்ல, இலங்கைத் தீவில் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்கள் சார்ந்த விடயங்களில் கூட இந்தியா விரும்பிக் கேட்ட எத்தனை விடயங்களை இலங்கை கொடுத்திருக்கிறது? கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியா கேட்டது. ஆனால் இலங்கை மேற்கு முனையத்தைத் தான் தருவேன் என்று கூறியது. தமிழர்களுக்கு என்று யாழ்பாணத்தில் இந்தியா ஒரு கலாச்சார மண்டபத்தை கட்டியது. ஆனால் அதனை முழுமையாக இயக்குவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கொழும்பின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க ஏன் இந்தியாவால் முடியவில்லை? பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்த இன்று வரை முடியவில்லை.காங்கேசன் துறையிலிருந்து தமிழகத்துக்கு கப்பலை ஓட விட இன்றுவரை முடியவில்லை. இப்படித் தான் இருக்கிறது இந்தியாவின் பிணைப்புத் திட்டங்கள்.

ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை புதிய பிணைப்பு திட்டங்கள் குறித்த ஒப்பந்தங்கள் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவிடமிருந்து மின்சாரம், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எரிபொருள் விநியோகக் குழாய்களை உருவாக்குவது, இரு நாடுகளுக்கும் இடையில் பாலங் கட்டுவதற்கான வாய்ப்புக்களைப் பரிசீலிப்பது போன்ற திட்டங்கள் உரையாடப்பட்டுள்ளன. ஆனால் இவையாவும் முழுமையாக நிறைவேற்றப்பட்ட பின்னர் தான் எதைக் குறித்தும் கருத்துச் சொல்லலாம். ஏனென்றால் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா இலங்கைத் தீவில் விரும்பி கேட்ட எதையுமே முழுமையாகப் பெற முடியவில்லை. அது மட்டுமல்ல, அம்பாந்தோட்டையில் சீனா கிட்டத்தட்ட நூறாண்டுக்கு குந்தியிருக்கும். கொழும்பு துறைமுகத்திற்கு அருகே செயற்கைத்தீவில் அதாவது



துறைமுக பட்டினத்தில் சீனப் பிரசன்னம் எப்பொழுதுமிருக்கும். இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் சீனப் பிரசன்னம் அதிகரித்த காலகட்டம் என்று பார்த்தால் 2009க்கு பின்னரான கடந்த 14 ஆண்டுகள்தான்.தனது செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் இச்சிறிய தீவில் சீன விரிவாக்கத்தைத் தடுக்க இந்தியாவால் முடியவில்லை. இச்சிறிய தீவு தனக்குள்ள கேந்திர முக்கியத்துவத்தின் அடிப்படையில் எல்லாப் பேரரசுகளையும் கெட்டித்தனமாக வெட்டியாண்டதன் விளைவாக சீனா தீவுக்குள் நுழைந்து விட்டது.

இவை அனைத்தையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் இந்தியா 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காது என்பதனை ரணில் சரியாகவே கணித்திருப்பார். பொருளாதார நெருக்கடியின் போது நாட்டிற்கு முதலில் உதவியதும் அதிகம் உதவியதும் இந்தியா தான். அதன் மூலம் இந்தியா ஆறு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது. அதாவது சிறிய இலங்கைத்தீவின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலம் இந்தியா பெற்றுக் கொண்டது இந்திய-இலங்கை உடன்படிக்கையைத் தான். அதன்பின் இந்தியா பெற்றுக் கொண்டவை பெரும்பாலானவை இலங்கைத் தீவை அரவணைப்பதன் மூலம் பெற்றுக் கொண்டவை தான். கடந்த ஆண்டிலும் அதுதான் நடந்தது. எனவே 13ஐ முழுமையாக அமல்படுத்துவதில் இந்தியாவுக்கு இருக்கும் வரையறைகளை அல்லது இயலாமைகளை ரணில் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். அந்தத் துணிச்சலில் தான் அவர் கூறுகிறார் 13 மைனஸைத் தான் தருவேன் என்று.

ஆயின் 13ஐ முழுமையாக அமல்படுத்தக் கேட்ட கட்சிகளும்,சிவில் சமூகங்களும், சமஸ்டியைக் கேட்ட கட்சிகளும் சிவில் சமூகங்களும் அடுத்த கட்டமாக என்ன செய்யப்போகின்றன? இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று அவர்கள் நம்பும் இறுதி இலக்கை நோக்கி போராடுவதற்கு அவர்கள் தயாரா? இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐநாவோ ,அல்லது தந்தை செல்வா கூறியது போல கடவுளோ, யாராக இருந்தாலும் தமிழ் மக்களுக்குத் தங்கத் தட்டில் தீர்வை வைத்துத் தரப்போவதில்லை. போராடினால் தான் தீர்வு கிடைக்கும். (20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இனுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# சிதறிப் போன மக்கள்?

(15ம் பக்கத் தொடர்ச்சி) இல்லாத வெற்றிடத்தில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் அல்லது தனிநபர்கள் அதை முன்னெடுத்து வருகிறார்கள். அவர்களுக் கிடையிலும் ஒன்றிணைப்பு இல்லை. அவர்கள் ஒரு வலுமையமாக இல்லை.

இது ஒரு தலை கீழ்நிலை. அதாவது வெளியுறவுச் செயற்பாடுகளை யார் முன்னெடுக்க வேண்டுமோ அவர்கள் அதைச் செய்யவில்லை. அதற்குரிய கட்டமைப்புகளும் அவர்களிடம் இல்லை. ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் போதிய செல்வம் உண்டு. மொழியறிவு உண்டு. தொடர்புகளும் உண்டு. அதைவிட முக்கியமாக, அவ்வாறான வெளியுறவுச் செயற்பாடுகளை வெளிப்படையாக முன்னெடுக்க தேவையான சுதந்திரமான வெளியும் அங்கே உண்டு. எனவே தாயகத்தில் செய்யாமல் விடப்பட்டதை அவர்கள் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இதில் மேலும் ஒருதாரணத்தை இங்கே சுட்டிக்காட்டலாம். கனடாவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் எனப்படுவது ஒரு தனிநபர் பிரேரணை தான். அத் தனிநபர் பிரேரணையை முன் மொழிந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பின்னணியில் சில விரல் விட்டு எண்ணக்கூடிய கனேடியத் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் காணப்படுகிறார்கள். நன்கு திட்டமிட்டு, தளராது, தொடர்ச்சியாக அவர்கள் உழைத்ததன் விளைவு தான் மேற்கண்ட தீர்மானம். அவ்வாறு தன்னை அர்ப்பணித்து செயல்படக்கூடிய ஆற்றலும் வளமும் பொருந்திய தமிழர்களும், அமைப்புகளும் உலகமெங்கும் உண்டு. ஆனால் அவர்களையெல்லாம் இணைப்பதற்கு ஒரு மையம் இல்லை. குறைந்த பட்சம் அவர்களைப் போன்றவர்கள் இடையூடாடுவதற்கு ஒரு மைய இடையூடாட்டத் தளங்கூட இல்லை. இதனால் திரட்டப்படாத தமிழ் உழைப்பும் வளங்களும் சிதறடிக்கப்படுகின்றன.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட காற்றுவழிக் கிராமங்களில் கோவில்கள் புனரமைக்கப்படுவதையும் மேற்கண்ட விளக்கத்தின் பின்னணியில் வைத்தே நோக்கவேண்டும்.

ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட்டால் ஊர்ப்பற்றையும் பிரதேசப் பற்றையும் தேசத்தைக் கட்டியெழுப்பும் பொதுவான நிகழ்ச்சி நிரலை நோக்கி ஆக்க சக்தியாகத் திரட்டலாம். அங்கு தனிநபர் பிம்பங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சி நிரல் பின்தள்ளப்பட்டு விடும். தாயகத்தில் உள்ள தேவைகளையும் புலம்பெயர்ந்த தரப்பில் உள்ள வளங்களையும் ஒருங்கிணைப்பது போன்ற அனைத்துமே கடந்தவாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, தசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு மைய நிகழ்ச்சிநிரலின் பிரிக்கப் படமுடியாத பகுதிகள் தான். ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற பொதுவான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவை ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்பட வேண்டும். ஆனால் மையம் இல்லாத தமிழர்களோ தலைகீழாகச் செயற்படுகிறார்கள்.

ஒருபுறம் வெளியுறவுச் செயற்பாடு கள். இன்னொருபுறம் ஊரின் பெருமையை நிலைநாட்டும் செயற்பாடுகள். ஆற்றல் மிக்க,அர்ப்பணிப்புள்ள, வளம் மிகுந்த தனிநபர்களும் நிறுவனங்களும் ஒரு மையத்தில் ஒன்றிணைக்கப்படாமல் சிதறிப்போய் தனித்தனியாக செயற்படுகின்றார்கள்.

முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகளுக்குத் தான் தாயகத்தை பிரிந்த பிரிவேக்கம் உண்டு.இறந்த காலத்தை ஊறுகாய் போட்டு வைத்திருப்பவர்கள் அவர்கள் தான். தாயகத்தில் கோவில்களைப் புனரமைப்பதும் அவர்கள் தான். அவர்களுடைய பிள்ளைகள் அதைச் செய்யாது.

ஏனென்றால் அந்தத் தலைமுறையிடம் பிரிவேக்கம் கிடையாது. எனவே முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகள் வயதாகி இறப்பதற்கு இடையில் ஊர்ப்பற்றை நாட்டுப் பற்றாக்கும் நோக்கத்தோடு தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற் திட்டங்களை வகுக்க வேண்டும். அதை ஒரு தொடர் செயற்பாடாக, பொறிமுறையாக நிறுவனமயப் படுத்தினால் அடுத்தடுத்த தலைமுறையும் அதில் முதலீடு செய்யும். தேசமும் பலமடையும்.

# டெல்லியில் ரணில்:-

(19ம் பக்கத் தொடர்ச்சி) போராடிய படியால் தான் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு குறைந்த பட்சம் பதின்மூன்றாவது கிடைத்தது. ஆனால் இப்பொழுது தமிழ் மக்களின் பேரம் பேசும் பலம் இறங்கி விட்டது என்று ரணில் நம்புகிறார். 13ஆவது திருத்தத்தை அமுல் படுத்துவதும்மாகாண சபைத் தேர்தலை நடத்துவது ஆகிய அதன் பொறுப்புகளை சிறீலங்கா பூர்த்தி செய்யும் என்று நம்புகிறோம்'' என்று இந்திய பிரதமர் கூறியதை அவர் ஒரு சம்பிரதாய பூர்வமான, சடங்கார்த்தமான வேண்டுகோளாகவே விளங்கிக் கொள்வார். எதிர்க்கட்சிகள் எதிர்கின்றன, பிக்குகள் எதிர்க்கிறார்கள் என்று கூறிக் கொண்டு அவர் 13ஐ முழுமையாக அமுல்படுத்த மாட்டார்.

ஆனால் இந்தியா மேலும் புதிய கனெக்ரிவிற்றி பிணைப்புத் திட்டங்களில் கவனத்தைக் குவிப்பதாகத் தெரிகிறது. கடல்வழிப் பிணைப்பு: தரை வழிப் பிணைப்ப் வான் வழிப் பிணைப்ப் சக்தி,மின்சார, எரிபொருட் பிணைப்ப் வலுசக்தி, வர்த்தகம் மற்றும் பொருளாதாரப் பிணைப்ப் நிதிப் பிணைப்ப் டிஜிற்றல் பிணைப்ப் மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான பிணைப்பு... போன்ற இன்னோரன்ன பிணைப்புத் திட்டங்கள் தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலர் பேசுகிறார். ஏற்கனவே இந்தியா முன்னின்று தொடங்கிய தமிழ் மக்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான பிணைப்புத் திட்டங்கள் அரைகுறையாகத் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், புதிய பிணைப்புத் திட்டங்களின் மீது இந்தியா கவனம் செலுத்தத் தொடங்கி விட்டதா? இனப் பிரச்சினைக்கான தீர்வின் மீதான இந்தியாவின் கவனக் குவிப்பைத் திசை திருப்ப மேற்படி பிணைப்புத் திட்டங்கள் இலங்கைக்கு உதவுமா?

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை

# மோடியின் பச்சைக் கொடி!

(21ம் பக்கத் தொடர்சசி0 கௌரவமான வாழ்வு உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியிருக்கிறார். 13ஆவது திருத்தச் சட்டத்துக்குள் முடங்கிக் கொள்ள முற்பட்ட சில தமிழ்த் தரப்புகள், இனி அதற்கு அப்பாற்பட்ட அபிலாசைகளை வெளிப்படுத்த முற்படலாம்.

ஏனென்றால், இந்தியாவுக்குப் பிடிக்காது, இந்தியா ஏற்காது என்றே அவர்கள், 13 ஆவது திருத்தம் என்ற குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்ட முனைந்தனர்.

இந்தியப் பிரதமர், தமிழர்களின் அபிலாசைகள் தொடர்பாக குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவாத்ரா தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஒன்று பட்ட செழிப்பான இலங்கைக்குள், சமத்துவமான, நீதியான, சுய மரியாதையுடன் கூடிய தமிழ்ச் சமூகத்தின் அபிலாசைகளை தீர்த்து வைக்கக் கூடிய அரசியல் தீர்வு குறித்து இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும் என்று இந்தியப் பிரதமர் எடுத்துக் கூறியிருக்கிறார் என குவாத்ரா குறிப்பிட்டிருக்கிறார். அடுத்து அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வும், 13 ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கமும், நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு அவசியமான விடயங்கள் என்றும், இந்தியப் பிரதமர் கூறியிருப்பதாகவும், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது, இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டத்துக்குள் தமிழர் பிரச்சினையை வரையறுத்துக் கொள்வதற்கு அப்பால், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தில் கரிசனை கொண்டிருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறது.

தமிழர் தரப்பை பொறுத்தவரையில் இது சாதகமானது. 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகளுக்குள் அபிலாசைகளை சுருக்கிக் கொள்ளாமல் தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகளை நோக்கி முன்செல்வதற்கு தமிழ்க் கட்சிகளுக்கு இந்தியா காண்பித்துள்ள பச்சைக் கொடியாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம்.

# 1வது ஆண்டு நினைவஞ்சலி



முல்லைத்தீவில் அமைந்துள்ள அன்பு இல்லப் பிள்ளைகளுக்கு கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக் கிளையினரால் 21 யூலை 2023 வெள்ளிக்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்து தாயகத்தில் அமரத்துவமடைந்த திரு தவசீலன் சுப்பையா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளுக்காக ஈழநாடு பத்திரிகை ஊடாக சிறப்பு உணவு வழங்கியுள்ளார்கள்.

திரு தவசீலன் சுப்பையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவுகள் மற்றம் கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக்கிளையினருடன் இணைந்து அன்பு இல்லக்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள். கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக்கிளையினூடாக இக் குழந்தைகளுக்கு உணவு, உடை, கற்றல் உபகரணங்கள் போக்குவரத்து வசதிகள் போன்ற அடிப்படை தேவைகளுக்கு உதவ ஆர்வமுடையவர்கள் எம்மை தொடர்பு கொள்ளலாம். தர்மசிறி (647-328-8880) செந்தூர் (647-991-4656) சிவா (647-716-7366)

கந்தரோடை மக்கள் ஒன்றித்தின் கன்னி முயற்சி வெற்றி பெறவும் அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளின் சார்பிலும் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# கனேடிய எதிர்ப்புணர்வும் பின்னணியும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) கட்சி வலியுறுத்தியிருக்கிறது.டிகனடா மற்றும் அவுஸ்ரேலியாவுடன், இந்தியா நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தாலும், காலிஸ்தான் ஆதரவு போராட்டங்கள் இந்த நாடுகளில் தீவிரம் பெறுவதை இந்தியா விரும்பவில்லை. அதனைக் கடுமையாக எதிர்த்து வருகிறது. எதிர்வினையாற்றி வருகிறது. அவ்வாறான எதிர்வினைகளுடன் இலங்கையும் கைகோர்த்துச் செயற்பட முனைகிறது. அதற்குக் காரணம் உள்ளது. புலம்பெயர் சீக்கியர்கள் கனேடிய அரசியலில் செலுத்தும் செல்வாக்கைப் போலவே புலம்பெயர் தமிழர்களும் செல்வாக்கு செலுத்துபவர்களாக மாறியுள்ளனர்.

கனடாவின் பிரதான கட்சிகளில் ஒன்றான புதிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் என்ற சீக்கியர் தான். கனே டிய பாராளுமன்றத்துக்கு 2019 இல் 18 சீக்கியர்கள் தெரிவாகினர். 2021 நாடா ளுமன்றத் தேர்தலில் 16 பேர் வெற்றி பெற்றனர். ஆனால், இந்திய பாராளுமன்ற த்தின் லோக்சபாவில் 13 சீக்கியர்கள் தான் இருக்கிறார்கள். அந்தளவுக்கு கனேடிய அரசியலில் சீக்கியர்களின் செல்வாக்கும் ஆர்வமும் உள்ளது. இதனை இந்தியா ஆரோக்கியமான ஒன்றாக பார்க்கவில்லை. அது காலிஸ்தான் பிரிவினைக்கு வித்திடுமோ என்று அஞ்சுகிறது. இலங்கையும் அவ்வாறு தான் புலம்பெயர் தமிழர்களை நோக்குகிறது.

இனப்படுகொலைத் தீர்மானத்தை முன்னின்று நிறைவேற்றிய, கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, இலங்கை வருவதற்கு விசா மறுக்கப் பட்டு, தடை விதிக்கப்பட்டுள்ளதும் இவ்வாறான ஒரு எதிர் வினை தான். கனடா சீக்கிய புலம்பெயர் சமூகத்தையும், தமிழ்ச் சமூகத்தையும் சமமாக நடத்துவது போல இந்தியாவோ இலங்கையோ இந்தச் சமூகங்களை நடத்தவில்லை. இவ்வாறான நிலையில் கனடாவை தனியாக எதிர்ப்பதை விட இந்தியாவுடன் சேர்ந்து எதிர்ப்பது தான் புத்திசாலித்தனமானதெனக் கருதுகிறது இலங்கை அரசாங்கம்.

அதற்காகத் தான் காலிஸ்தான் அமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுகிறது. அவர்களுடன் தமிழர்களின் போராட்டங்கள் மற்றும் அரசியல் முயற்சிகளை முடிச்சுப் போட்டு, தமிழர்களின் போராட்டத்தை நசுக்க முற்படுகிறது அரசாங்கம்.

# மோடியின் பச்சைக் கொடி!

ஜனாதிபதியாகப் பதவியேற்று சரியாக ஒரு வருடத்துக்குப் பின்னர், இந்தி யாவுக்குப் பயணம் மேற்கொண்டு, திரும்பியிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நீண்டகால காத்திருப்புக்குப் பின்னர் கைகூடியிருக்கிறது இந்தப் பயணம்.

இந்தப் பயணத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும், மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகளையும் அவர் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

புதுடெல்லி சென்று இறங்கியதும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தனியாகப் பேச்சு நடத்தியிருந்தார். இது இந்தியப் பிரதமருடனான சந்திப்பில் பேசப்படும், இணக்கப்பாடு காணப்பட வேண்டிய விடயங்களை ஆராயும் சந்திப்பாக இருந்தது.

மறுநாள், 21ஆம் திகதி, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலும் ரணில் விக்கிரமசிங்கவை தனியாகச் சந்தித்துப் பேசியிருந்தார். அதன் பின்னர் தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஹைதராபாத் இல்லத்தில் இடம் பெற்றிருக்கிறது.

இந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாக 5 புரிந்துணர்வு உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன. இலங்கை – யுடன் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வது, சக்தி மற்றும் போக்குவரத்து திட்டங்களை வலுப்படுத்துவது, ஆகிய இலக்குகளின் அடிப்படையில் இந்த புரிந்துணர்வு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன.

திருகோணமலையை எரிசக்தி கேந்திரமாக உருவாக்குவதற்கு இரண்டு நாடுகளும் இணங்கியிருக்கின்றன. இது 2015இல் இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு வந்திருந்த போது முன்வைக்கப்பட்ட திட்டம். 8 ஆண்டுகளாக முன்னகராமல் இருந்த இந்த திட்டத்தை மீண்டும் செயற்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. திருகோணமலையை அபிவிருத்தி செய்வதும் அதன் உள்ளடக்கங்களில் ஒன்று.

அதை விட இந்தியாவையும், இலங்கையையும், கடல் மற்றும் வான் மார்க்கமாக இணைக்கும் போக்குவரத்து சேவைகளை பலப்படுத்துவதற்கும் இணங்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்காக கப்பல் சேவைகள், விமான சேவைகளை முன்னெடுக்கவும், அவை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்துக் கொள்வதற்கும் இணக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவையும், இலங்கையையும் இணைக்கும் தரைப்பாலத்தை அமைக்கும் திட்டம் குறித்து சாத்திய ஆய்வு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு குழாய்கள் மூலம் எரிபொருள் கொண்டு வரும் திட்டமும் முன்மொழியப்பட்டு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

ஏற்கனவே அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றில் முதலீடு செய்வதற்கு, இரண்டு சீன நிறுவனங்கள் முன்வந்திருக்கின் – றன.

ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்தின் போது அதுகுறித்த இறுதி முடிவு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவை அவ்வாறானதொரு திட்டத்தில் முதலீடு செய்ய வைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் திட்டமிட்டது.

ஆனால் இந்தியாவோ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பது தொடர்பான திட்டத்தை விட, குழாய் மூலம் எண்ணெய் விநியோகம் செய்யும் திட்டத்தை முன்மொழிந்திருக்கிறது. கடல்சார் பாதுகாப்புக் கரிசனைகள் குறித்து முக்கியமாக ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது

இந்த விடயத்தில் இந்தியாவின் கவலைகள், கரிசனைகளை இலங்கை புரிந்து கொண்டிருப்பதாகவும், அதனை மதித்து நடந்து கொள்வதாக



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி கொடுத்திருப்பதாகவும் பேச்சுக்களுக்குப் பின்னர் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் மோகன் குவாத்ரா தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நடத்திய கூட்டு செய்தியாளர் சந்திப்பில் பிரதமர் மோடியும், இந்தியாவினதும் இலங்கையினதும் பாதுகாப்பு நலன்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

சீனாவின் பக்கம் சாய்கின்ற இலங்கையின் போக்கை – குறிப்பாக கடல்சார் பாதுகாப்பு கரிசனைகள் விடயத்தில் இந்தியாவுக்கு சவாலான விடயங்களில் இலங்கையின் சில முடிவுகள் அமைந்திருந்ததால், அதற்கு எல்லை வேலியிட்டிருக்கிறார் இந்தியப் பிரதமர்.

இரண்டு நாடுகளின் பாதுகாப்பு நலன்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை என்ற கருத்து, பாதுகாப்பு விவகாரங்களில் இந்தியாவை மீறி இலங்கை செயற்படக் கூடாது என்பதையே அர்த்தப்படுத்துகிறது.

சீனாவின் ஆதிக்க விரிவாக்கத்துக்கு முட்டுக்கட்டை போடும் வகையில், இலங்கையுடன் நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை பேச்சுக்களிலும் சரி, கூட்டுச் செய்தியாளர் சந்திப்பிலும் சரி, தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது.

ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னரே, பல்வேறு தமிழ்க் கட்சிகள், அமைப்புகள், இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதங்களை அனுப்பியிருந்தன.

அவை ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டதாக இருந்தாலும், தமிழர் பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் இந்தியாவுக்கு உள்ள பொறுப்பும், கடப்பாடுகளும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் இந்தியப் பிரதமர் சில விடயங்களை வலியுறுத்தியிருக்கிறார்.

தமிழர் பிரச்சினைத் தீர்வு, வடக்கு அபிவிருத்தி போன்றவற்றை உள்ளடக்கிய விரிவான திட்டத்தை தாம் தமிழ் அரசியல் கட்சிகளிடம் முன் வைத்திருப்பதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்த நிலையில் இந்தியப் பிரதமர் மோடி தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தினார். மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது என்பது முதலாவது விடயம்.

இந்த விடயத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாசூக்காகவே சொற்களைக் கையாண்டிருக்கிறார். இந்தியா வலியுறுத்துகிறது என்று கூறவில்லை. மாறாக எதிர்பார்க்கிறது, நம்புகிறது, என்றே குறிப்பிட்டிருக்கிறார்.

இது வெளிப்பார்வைக்கு மென்மையான தொனியாகத் தெரிந்தாலும், இராஜதந்திர ரீதியாக அது கனதியானது.

இலங்கை ஏற்கனவே வாக்குறுதிகளை அளித்திருக்கிறது. அதனை நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்பதாகவே கூறியிருக்கிறார் மோடி. வாக்குறுதிகள் என்பது நிறைவேற்றப்பட வேண்டியவை. அதனை தட்டிக்கழிக்க முடியாது. அந்த வகையில் இந்தியப் பிரதமர், 13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தையும் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தியிருக்கிறார் என்றே கருத முடியும்.

இந்தியப் பிரதமர் மோடி, 13 ஆவது திருத்தச்சட்ட விடயத்துடன் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தை கைவிட்டு விடவில்லை. அதற்கு அப்பாலும் சென்றிருக்கிறார். அது தான் முக்கியமானது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என நம்புகிறோம். சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மறுசீரமைப்பு செயல்முறையை முன்னெடுத்துச் செல்லும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு மரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யும் என நம்புகிறோம் என்றும் இந்தியப் பிரதமர் மோடி குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழர் பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை இது வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. 13 ஆவது திருத்தச் சட்டம் தான் தீர்வு என்ற நிலைப்பாட்டை இந்தியா கொண்டிருந்தால், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பற்றி இந்தியப் பிரதமர் பேசியிருக்க வேண்டியதில்லை. மாறாக அவர் தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். தமிழ் மக்களின் அபிலாசைகள் 13 ஆவது திருத்தம் அல்ல. ஒன்றுபட்ட பிளவுபடாத இலங்கைக்குள் கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட சமஷ்டி தீர்வு ஒன்றைத் தான் தமிழ் மக்கள் தங்களின் அபிலாசைகளாக கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், இந்தியா சமஷ்டி தீர்வு குறித்து வெளிப்படையாக பேசாது போனாலும், தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கும் வகையில், நீதியான, சமத்துவமான தீர்வு அடையப்பட வேண்டும் என்றும், தமிழ் மக்களின் கண்ணியமான (20ம் பக்கம் பார்க்க)

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இருப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.

ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்குதாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகலாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.

மிதுனராசி அன்பர்களே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.

கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னின்று தீர்த்து வைத்து தொழிலை செவ்வனே நடத்தி விடுவீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்புண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.

சிம்மராசி அன்பர்களே! மாற்றங்கள் வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலுவையில் இருந்த சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.

கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளிநாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப்போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது.

துலாம்ராசி அன்பர்களே! வாழ்வின் முன்னேத்திற்கான வழிகள் பிறக்கும். தொழில் – வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ்தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக்கிடையே சுமூகமான உறவு இருக்கும்.

விருச்சிகராசி அன்பர்களே! மற்றவர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோகமாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.



தனுசுராசி அன்பர்களே! மனதிற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்துவது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.

மகரராசி அன்பர்களே! உங்களின் வெற்றிக்கு வழிகாட்டுதல்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.

கும்பராசி அன்பர்களே! உடனிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலில் இருந்த இடையூறுகளை களைவீர்கள். தொழிலாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற்படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி

மீனராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# வடக்கில் மூடப்படும் பள்ளிக்கூடங்கள்!

(18ம் பக்கத் தொடர்ச்சி) மக்களின் நிலையே வேறு. அவர்கள் தான் எப்போதும் பாதிக்கப்படுவோராக உள்ளனர். இனவன்முறை நடந்தால் அதிலும் அவர்களே பாதிக்கப்படுகிறார்கள். யுத்தம் நடந்தால் அதிலும் அவர்களே பாதிக்கப்படுகிறார்கள். இனவாத அரசியலும் அவர்களே பாதிக்கப்படுகிறார்கள். இந்தப் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கு அவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி பாதுகாப்புத் தேடியும் பொருளாதார விருத்தியைத் தேடியும் இடம்பெயர்வது, புலம்பெயர்வது என்பதுதான். இது நிதர்சனமான உண்மை. மட்டுமல்ல, உயிரியல் உண்மையும் கூட.

உணவும் நீரும் சரியாக இல்லையென்றால் அவற்றைத் தேடி விலங்குகளும் பறவைகளும் கூட இடம்பெயரும் என்பது உயிரியல் விதியல்லவா! நமது சூழலில் மொழிப் பேணுகையைப் பற்றியும் மொழி வளர்ச்சியைப் பற்றியும் கதைக்கும் அளவுக்கு அதனை உரிய முறையில் மேம்படுத்தும் வேலைத்திட்டங்களில் ஈடுபடுவதில்லை. அப்படித்தான் பண்பாட்டு நடவடிக்கைகளும். மேற்கொள்ளப்படும் பண்பாட்டுப் பெருவிழாக்களில் பலவும் கோமாளித்தனமானவையும் பெறுமானம் குறைந்தவையுமாகும்.

அறிவார்ந்த தளத்தில் மேற் கொள்ளப்படாத பண்பாட்டு நடவடிக்கைகள் எவையும் வளர்ச்சிக்குரியன அல்ல. இதைக்குறித்து அறிவார்ந்த தளத்தில் சிந்திப்போர் வலியுறுத்தும் கருத்துகளை முன்வைத்தாலும் அதிகாரத் தரப்பினரும் அரசியல் தலைமைத்துவத்தினரும் அதைக் கவனத்திற் கொள்வதில்லை. எனவேதான் இவை நெருக்கடி நிலையை எட்டியுள்ளன.

இப்படித் தான் நிலம் தொடர்பான நிலைப்பாடும் உள்ளது. வடக்குக் கிழக்கு இணைப்பு, தமிழரின் தாயகபூமி என்றெல்லாம் சொல்லப்பட்டாலும் அந்த நிலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மிகச் சிக்கலானவையாகவே உள்ளன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமாக தமிழர்களின் பாரம்பரிய நிலப்பிரதேசம் அபகரிக்கப்படுகிறது என்பது உண்மை. ஆனால், இவ்வாறு வலியுறுத்துகின்றவர்கள், அந்தப் பிரதேசங்களை எப்படிப் பாதுகாக்கலாம். தமிழர் நிலங்களில் மக்கள் தொகையை எப்படி வலுப்படுத்தலாம், அதிகரிக்கலாம் என்று சிந்திப்பதில்லை. அல்லது அதற்கான காரணங்களும் வழிமுறைகளும் தெரிந்தாலும் அவற்றைப் பேசுவதோ முன்னெடுப்பதோ இல்லை.

இதற்கு முக்கியமான காரணம், களப்பணியைச் செய்யத் தவறுவதும் அந்தக் களப்பணியில் முக்கியமாக இருக்கும் அபிவிருத்தியை மேற்கொள்ளாமல் விடுவதுமாகும். இதனால் தான், அபிவிருத்தி அரசியலை அரசாங்க சார்பு அரசியலாகச் சித்தரித்து அதை ஒதுக்கும் நிலை ஏற்பட்டது. இது சமூகத்தை முடக்கும் நிலைக்குக் கொண்டு வரும் என்று பலரும் கருதியிருக்கவில்லை. இதனால் நீண்டகாலமாக தமிழ் அரசியற் பரப்பிலும் ஊடகங்களிலும் அபிவிருத்தி அரசியல் என்பது அரசாங்க சார்பு அரசியல், ஒத்தோடும் அரசியல், துரோக அரசியல் என இந்தக் கருத்துச் செல்வாக்குப் பெற்றிருந்ததால் மக்களிலும் பெரும்பாலானோர் இதன்வழியே பயணித்தனர். ஏறக்குறைய எதிர்ப்பு அரசியல் என்ற வழியில்.

இதனால் தமிழ்ப் பிரதேசங்களின் முன்னேற்றமும் அபிவிருத்தியும் தடைப்பட்டது. இந்தப் பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. இதைக் கிழக்கில் தெளிவாகக் காணமுடியும். அங்கே தமிழ்ப் பிரதேசங்களையும் விட முஸ்லிம் பிரதேசங்களும் சிங்களப் பிரதேசங்களும் முன்னேற்றமாக உண்டு. வடக்கில் இந்த ஒப்பீட்டுக்கு வாய்ப்பில்லை என்பதால் அந்த வித்தியாசத்தை உணர முடிவதில்லை.

இதைக் கடந்து அபிவிருத்தியைப் பற்றிப் பேசியவர்களும் அந்த அரசியலை முன்னெடுத்தவர்களும் தவறானோராகச் சித்தரிக்கப்பட்டனர். அபிவிருத்தியைப் பற்றிப் பேசியவர்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று இனவிடுதலையும் அபிவிருத்தியும் இரு கண்களைப் போன்றவை. ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. இரண்டும் சமாந்தரமானவை. ஒன்றை விட்டு ஒன்றைப் பிரித்துப் பார்க்க முடியாது என்ற நோக்குடையவர்கள்.

இரண்டாவது, அரசாங்கத்துடன் இணைந்து நிற்பதன் மூலமாகவே அபிவிருத்தியைச் செய்ய முடியும். அல்லது அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதன் வழியாக அபிவிருத்தியைச் செய்ய முடியும் என்று கருதியவர்கள். இவர்கள் இணக்க அரசியலை முன்வைத்தனர். இலங்கையில் இணக்க அரசியல் என்பது அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்ட அரசியலாகவே இருக்கிறது. அதன் பெறுமானத்தைப் புரிந்து கொண்டு அதை மேம்படுத்தும் போக்கை அரசாங்கமும் சிங்களத் தரப்பும் மேற்கொள்ளவில்லை. இதனால் அபிவிருத்தி அரசியலையும் இணக்க அரசியலாகவும் ஒத்தோடும் அரசியலாகவும் பார்க்கின்ற போக்கு வலுப்பெற்றது. இதை இணக்க அரசியலை முன்னெடுப்போர் கவனத்திற் கொள்வது அவசியம். வழமையான வாய்ப்பாட்டை அவர்கள் தூக்கி எறிந்து விட்டு புதிய மாற்று அரசியலைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இல்லையென்றால் அரசாங்கத்தின் பயன்பாட்டு அரசியலுக்குப் பலியாக வேண்டியிருக்கும்.

இதேவேளை எதிர்ப்பு அரசியலும் சவால்களைச் சந்திக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது. பழைய நிலை இன்றில்லை. நிலைமை அவ்வாறில்லை என்பதே இதற்குக் காரணம். மக்களுக்கு இன்னு வாழும் வழிகள் தேவை. வேலை வாய்ப்பு, பிரதேச அபிவிருத்தி போன்றவை அவசியமாகி விட்டன. எதன் பொருட்டும் அவர்கள் இதை விட்டு விடுவதற்குத் தயாரில்லை.

எனவே இந்த யதார்த்தம் எதிர்ப்பு அரசியலில் (தமிழ்த்தேசியவாத அரசியலில்) உடைப்பை உண்டாக்கியுள்ளது. இதனால் இப்பொழுது எதிர்ப்பு அரசியலோடு அபிருத்தியும் பேசப்படுகிறது. விடுதலை அரசியலும் பேசப்படுகிறது. இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை என்ற புரிதல் ஏற்பட்டுத்தான் இப்படிப் பேசுகிறார்கள் என்றில்லை. தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தினால், வாக்காளர்களைச் சமாளித்துக் கொள்ளும் உத்தியாகவே இதைப் பேசுகிறார்கள். உண்மையான புரிதல் ஏற்பட்டு இந்தச் சமாந்தர அரசியலை இவர்கள் முன்னெடுப்பதாக இருந்தால் அதற்கான பொறிமுறையையும் கட்டமைப்பையும் உருவாக்கியிருப்பார்கள். அல்லது அதை நோக்கிச் செயற்படத் தொடங்கியிருப்பார்கள்.

ஆகவே தான் இதை முன்னேற்றகரமானதாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால், மெய்யாகவே அப்படியான புரிதலுடன் இவர்கள் செயற்படுகின்றார்களா என்று கேட்குமளவுக்கு இதைப்பற்றிய குழப்பகரமான பேச்சுகளும் தடுமாற்றங்களும் நிலவுகின்றன. இது எப்போது தெளிவடையும்?

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
ஐயப்பன் இந்து ஆலயம் திறந்தவெளி அரங்கில்
2023 AUG 5&6
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
EVENT SPONSOR
$10,000 பெறுமதியான அதிஷ்டலாபப்பரிசுகள்
KIDS RIDE
JOYTHI
Blazing Minds 2023
POWERED BY
REALTOR AnAnth THARMALINGAM
416.939.9525
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
SILVER SPONSORS
அனுமதி இலவசம்
FREE ADMISSION
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
New Premium Stone Ltd
416.858.1290
Mega Tunes
Shanaa
AUGUST 5th, 6th - ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.